# அடிப்படை உரிமைகள் அம்சம் அவசியம்


Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

**ஈழநாடு சந்தா**
(ஆள்மூலம் விநியோகம்)

| | | தினசரி, வாரமலர் (உட்பட) | வாரமலர் (மட்டும்) |
|---|---|---|---|
| மூன்று மாதம் | ரூ. | 18-00 | 4-00 |
| ஆறு மாதம் | ரூ. | 34-00 | 7-50 |
| ஒரு வருடம் | ரூ. | 66 00 | 14-00 |

# ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 310
தேசிய தினசரி

**ஈழநாடு சந்தா**
(தபால் மூலம் விநியோகம்)

| | தினசரி, வாரமலர் (உட்பட) | வாரமலர் (மட்டும்) |
|---|---|---|
| 3 மாதம் | ரூ. 22-00 | ரூ. 4-50 |
| 6 மாதம் | ரூ. 42-00 | ரூ. 8-00 |
| ஒரு வருடம் | ரூ. 82-00 | ரூ. 15-00 |

யாழ்ப்பாணம் மார்கழி 4 ஷவ்வால் 19 சனிக்கிழமை (19-12-70)


# வடக்கில் பனம் பொருள் உற்பத்திக் கைத்தொழில்

## உடனடி நடவடிக்கை பற்றி ஆராய ஒரு குழு நியமனம்

### உதவி மந்திரி கலந்துகொண்ட மகாநாடு

யாழ்ப்பாணம், சனி

வடபகுதியில் பனம்பொருள் குடிசைக் கைத்தொழில்களை ஆரம்பிப்பதென்ற தீர்மானம் நேற்று முன்தினம் யாழ்ப்பாண அரசாங்க செயலகத்தில் நடைபெற்ற மகாநாடொன்றில் நிறைவேற்றப்பட்டது. அரசாங்க அதிபர் திரு. விமல் அமரசேகரா தலைமையில் நடைபெற்ற இம்மகாநாட்டில் பதில் கைத்தொழில் விஞ்ஞான அமைச்சர் திரு. அல்பேர்ட்காரியவாசம், வடப[illegible]திக்காரியாதிகாரிகள், கிராம அபிவிருத்தி அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

பனைமூலப் பொருள்களி[illegible] பற்றியும் பனைச் செய் தகுந்த நடவடிக்கை [illegible]ற்

## மனநோயாளருக்கு இசைநிகழ்ச்சி

### காங்கேசன்துறையில் ஏற்பாடு

மாவிட்டபுரம், வெள்ளி

காங்கேசன்துறை அரசினர் வைத்தியசாலையில் மனநோயாளர்களை குணப்படுத்த மாதந்தோறும் இசை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

மனநோயாளர்களுக்கு மருந்து மூலம் சிகிச்சையளித்துக் குணப்படுத்துவதுடன் இசை நிகழ்ச்சிகளையும் அடிக்கடி நிகழ்த்தி அவர்களையும் பங்கு கொள்ளச் செய்வதால் அவர்களின் மனநிலை சீரடையலாம் என்ற காரணத்தால் காங்கேசன்துறை அரசினர்வைத்தியசாலை மனநோயாளர் நலன் புரிசங்கத்தினர் பல பாடசாலைகளினதும், கலா நிறுவனங்களினதும் ஆதரவில் நடத்தி வருகின்றனர்.

காங்கேசன் துறை மனநோயாளர் பகுதி பிரதம வைத்திய அதிகாரி ரி. அருளம்பலம் தலைமையில் நேற்று மாலை நடைபெற்ற இசை நிகழ்ச்சியில் பாடசாலை மாணவ, மாணவிகளின் இசை நிகழ்ச்சிகள் இடம் பெற்றன.

இந்நி[illegible]ழ்ச்சிகளை மனநோயாளர்களும் பொதுமக்களும் அமைதியாக இருந்து இரசித்து மகிழ்ந்தனர்.

இவ்வைபவத்திற்கு வேண்

## பீடி புகையிலை இறக்குமதி

கோட்டை, வெள்ளி

அடுத்தமாதம் முதல் கூட்டுறவுமொத்த விற்பனை ஸ்தாபனம் பீடி புகையிலை இறக்குமதியை மேற்கொள்ளவிருக்கிறது.

இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இடங்களிலிருந்து பீடிப் புகையிலை இறக்குமதி செய்யப்படவுள்ளது. 1971-ம் ஆண்டுமுதல் பதிவு செய்யப்பெற்ற பீடி உற்பத்தியாளர்களுக்கே கூட்டுறவுமொத்த விற்பனை ஸ்தாபனம் பீடிப்புகையிலையை வழங்கவுள்ளது,

இதுவரை காலமும் தனியார் பீடிப் புகையிலையை இறக்குமதிசெய்தனர். இதனால் பீடிப் புகையிலை இறக்குமதி விநியோகத்தில் ஊழல் நிறைந்திருந்தது கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனம் வருங்காலத்தில் இவ்விறக்குமதியில் ஈடுபடவிருப்பதால் இத்தகைய ஊழல் இனிமேல் இருக்காது என எதிர்பார்க்கப்படுகிறது.

## கண்டகடரின் முன்மாதிரி

யாழ்ப்பாணம், சனி

பஸ்ஸில் தவறவிடப்பட்ட 2000 ரூபா பெறுமதியான பவுண் நகைகளைக்கண்டெடுத்து இ. போ. ச. காரியால

## அரசியல் சாஸனம் பற்றிய கருத்தரங்கில் வலியுறுத்தல்

கொழும்பு, வியாழன்

புதிய அரசியல் திட்டத்தில் அடிப்படை உரிமைகள் அம்சம் இடம்பெற வேண்டும் அப்படிச் சட்டத்தில் அடிப்படை உரிமைகள் இடம்பெறாவிட்டால் அதனால் சிறுபான்மை மக்களுக்கு எவ்வித பயனுமில்லை. இந்த உரிமைகள் சட்டத்தில் இடம் பெறுவது மட்டுமல்ல; அதை அமுல் நடத்தும் உரிமைகள் சுதந்திரமான நீதிமன்றங்களுக்கு இருக்கவேண்டும்.

இவ்வாறு கொழும்பு வை. எம். சி. ஏ. மண்டபத்தில் புதிய அரசியல் சட்டம் பற்றிய கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் முன்னாள் உபசபாநாயகர் திரு மு. சிவசிதம்பரம் கூறினார்.

இக் கருத்தரங்கில் வழக்கறிஞர் திரு எல். டபிள்யூ. அத்துளத்முதலி பேசுகையில், இன்று அடிப்படை உரிமைகள் பற்றிபலரும் பேசுகின்றனர் அடிப்படை உரிமை என்பது, பேச்சு சுதந்திரம் மத மொழி சுதந்திரம் ஆகியாவை மட்டுமல்ல. இந்த நாட்டில் வாழுகின்ற ஒவ்வொருவருக்கும் திறமைக்கேட்பவேலை அளிக்கப்பட வேண்டும். இதுவும் அடிப்படை உரிமைகளில் ஒன்றுதான். அது மட்டுமல்ல வேலைக்கேற்ப ஊதியமும் அளிக்கப்பட வேண்டும்.

அடிப்படை உரிமைகளை சேர்த்து விடுவதினால் சிறுபான்மை மக்கள் பயன் அடைந்து விடுவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. சமுதாய மாற்றங்கள் ஏற்படுங் காலங்களிலெல்லாம் இந்த சாசனங்கள் அடிபட்டுச் சென்றுவிடும் இந்த நாட்டு மக்கள் யாவரும் ஒன்றே என்ற உணர்வு ஏற்பட வேண்டுமென்றார்.

வித்தியலங்காரப்பல்கலைக்கழகப் பேராசிரியர் டாக்டர் ரத்னசார தேரோ பேசுகையில் 1815-ம் ஆண்டு இந்த நாட்டை ஆங்கிலேயர் கைப்பற்றியபொழுது அப்பொழுது நாட்டில் சிறப்புற்றிருந்த பௌத்த மதத்தைக் காப்போம் என்றே உறுதிமொழி கூறி ஒப்பந்தம் செய்தனர் இலங்கை சுதந்திரம் பெற்றபின் 1815ம் ஆண்டு பௌத்த மதத்திற்கு இருந்த அந்தஸ்தை திரும்பவும் அளிக்க வேண்டுமென்பது நியாயமானதே அதுவும் அடிப்படை உரிமைகளில் ஒன்றுதான்,

பௌத்த மதத்திற்கு இந்த நாட்டில் முதன்மை அளித்து விடுவதினால் பிற மதங்கள் அழிந்து விடுமென்று அஞ்சத் தேவையில்லை. அப்படிப் பௌத்த மதத்திற்கு முதன்மை அளிப்பதினால் பிற மதங்களும்வளரும் என்றார்.

அக்குறஸ் பல்கலைக்கழக கல்லூரி அதிபர் வண பிதா திஸ்ஸபாலசூரியா பேசுகையில் அரசியல் அடிப்படை உரிமைகளும் பிற உரிமைகளும் அரசியல் திட்டத்தில் இடம்பெற்று விடுவதினால் மட்டும் பெரியபலன் ஏற்பட்டு விடும் என்று சொல்ல முடியாது. நாம் அனைவரும் இந்த நாட்டு மக்கள் என்ற உணர்வு ஏற்பட வேண்டும், இந்த நாட்டில் வாழ்கின்ற எல்லாஇன மக்களும் சமம் என்ற உணர்வு ஒவ்வொருவர் மனதிலும் ஆழப்பதிந்திருக்க வேண்டும். அவ்விதயான மனமாற்றம் இந்த நாட்டு மக்களுக்கு ஏற்பட வேண்டும். சட்டங்களை ஆக்கிவிடுவதினால் மட்டும் யாருக்கும் எவ்வித உரிமையும் கிடைத்துவிடாது. இவ்வித மனமாற்றம் ஏற்படாவிட்டால் இந்தச் சட்டங்களை செயலாக்க முடியாதுபோய் விடும். எனவே இந்தநாட்டு மக்கள் ஒருமைப்பாட்டுணர்வுடன் யாவரும்சமம் என்ற உணர்வை சிந்தையில்உடையவர்களாய் இருக்கவேண்டும் என்றார்,

## இன்று இ. போ. ச. வடபகுதி கூட்டுக்கமிட்டி கூடுகிறது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிக்கடி நிகழ்த்தி அவர்களையும் பங்கு கொள்ளச் செய்வதால் அவர்களின் மனநிலை சிரடையலாம் என்ற காரணத்தால் காங்கேசன்துறை அரசினர்வைத்தியசாலை மனநோயாளர் பகுதியில் மாதந்தோறும் இசைநிகழ்ச்சிகள் நடத்தப் படுகின்றன.

இந்நிகழ்ச்சிகளைக் காங்கேசன்துறை மனநோயாளர் இசை நிகழ்ச்சிகள் இடம் பெற்றன.

இந்நிகழ்ச்சிகளை மனநோயாளர்களும்' பொதுமக்களும் அமைதியாக இருந்து இரசித்து மகிழ்ந்தனர்.

இவ்வைபவத்திற்கு வேண்டிய ஒழுங்குகளை காங்கேசன்துறை அரசினர் வைத்தியசாலை அத்தியட்சகர் திரு. பேரின்பநாயகம் செய்திருந்தார்.

# கடலட்டையை இலங்கை மக்களும் உண்ணுவர்?

## பரிசீலனை நடைபெறுகிறதாம்

கோட்டை, வெள்ளி

சிங்கப்பூர், ஜப்பான், சீனு போன்ற நாடுகளில் பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ள கடலட்டையை இலங்கை உணவுக்காக பாவிப்பது பற்றிய பரிசீலனை நடைபெற்று வருவதாகத் தெரிகிறது. கடலட்டைகளை வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் மூலம் மேற்படி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்துவருகின்றன.

சிங்கப்பூருக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு தரகர்கள் மூலம் ஜப்பான், சீனு போன்ற நாடுகளுக்கு விற்பனை செய்யப்பட்டு வரும் கடலட்டை ஏற்றுமதியை கடற்றொழில் அமைச்சு நேரடியாகப் பொறுப்பேற்று நடத்துவது பற்றியும் ஆலோசிக்கப்பட்டு வருகிறது. இலங்கைக்கு கடலட்டை ஏற்றுமதி மூலம் பெருந்தொகையான அந்நிய செலாவணி கிடைப்பதினுல் கடலட்டைத் தொழிலை வடபகுதியில் அபிவிருத்தி செய்யவும் அமைச்சு தீர்மானித்துள்ளது.

கிளிநொச்சியில்

## 2 கிராமிய வங்கிகள்

கிளிநொச்சி, வெள்ளி

இப்பகுதியில் இரண்டு கிராமிய வங்கிக்கிளைகளைத் திறக்க மக்கள் வங்கியினர் திட்டமிட்டுள்ளனர். இவ்விரு கிளைகளும் பரந்தன், துணுக்காய் ஆகிய இடங்களில் தைமாத முற்பகுதியில் ஆரம்பிக்கப்படுமெனத்தெரிகிறது

இக்கிளைகள் விவசாயக் கடனையும் வழங்குவதுடன் நகை அடகு பிடித்தல், சேமிப்பு வைப்புக்கணக்குகளை வைத்தல் ஆகியவற்றையும் செய்யுமாம். கூட்டுறவுச் சமாசங்கள் இங்கேயே தமது கணக்குகளைவைக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

ஞானஅமைச்சர் திரு. அல்பேர்ட்காரியவாசம், வடப திக்காரியாதிகாரிகள், கிராம அபிவிருத்தி அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பனைமூலப் பொருள்களிருந்து என்னென்ன கைத்தொழில்களை ஆரம்பிக்கலாமென்பது பற்றியும் மூலப் பொருள்களை எவ்வாறு பயன் படுத்தலாமென்பதுபற்றியும் ஆராய்ந்து உடனடியாக அறிக்கை சமர்ப்பிப்பதற்கென நான்கு காரியாதிகாரிகளைக் கொண்ட குழுவொன்றும் நியமிக்கப்பட்டது.

தென்மராட்சிப் பகுதிக் காரியாதிகாரி திரு. சிதம்பரப்பிள்ளை, வடமராட்சிப் பகுதிக்காரியாதிகாரி திரு. தம்பிமுத்து வலிகாமம் வடக்குகாரியாதிகாரி திரு. பி.எல். பற்றிக்ஸ் தீவுப்பகுதிக்காரியாதிகாரி திரு. நடராசா ஆகியோரே இந்தக்குழுவில் அங்கம்வகிக்கின்றனர்.

...பற்றியும் பனைச் செய்கைபற்றியும் அதன் உபயோகங்கள் பற்றியும் நீண்ட நேரமாக ஆராயப்பட்ட இந்த மகாநாட்டில் உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. முருகேசம்பிள்ளை பேசுகையில், பூநகரி, கிளிநொச்சி, துணுக்காய் ஆகிய பகுதிகளில் அரசாங்கமே முடிக்குரிய காணிகளில் பனை செய்கைபண்ண வேண்டுமென்றும் பனை வளர்ப்பின்மூலம் மழை பெய்யுமென்றும் மண்அரிப்பு தடுக்கப்படுமென்றும் கூறினுர்.

பனைச் செய்கை சம்பந்தமாக தமது அமைச்சருடனும் வனபரிபாலன இலாவுடனும் ஆலோசனைசெய்து தகுந்த நடவடிக்கை மேற்கொள்வதாக உதவிஅமைச்சர் தெரிவித்தார்.

பனைச் செய்கை ஆரம்பித்து அவற்றின்மூலம் பயனடைய நினைப்பது நீண்டகாலத்திட்டமென்றும் இப்போதுள்ள பனைகளிலிருந்து பெறப்படும் மூலப் பொருள்களை எப்படிப் பயன்படுத்தலாமென்பதும் என்னென்ன தொழில்களை ஆரம்பிக்கலாமென்பது பற்றியும் இப்போது ஆராய்வதுதான் பயன்தருமென்று அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்தே மேற்கண்ட காரியாதிகாரிகளைக் கொண்ட குழு நியமிக்கப்பட்டது.

# சமசமாஜக் கட்சியின் பலம் அதிகரித்துள்ளதாம்

கொழும்பு, சனி

இப்பந்தைந்தாவது ஆண்டு நிறைவு விழாவை முன்று கொண்டாடும் லங்கா சமசமாஜக்கட்சி முன்னெப்பொழுதையும் விடஅதிகபலம் வாய்ந்ததாக விளங்குகிறதென அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். ஆட்சிமன்றத்தில் லங்கா சமசமாஜக் கட்சியின் பலம் இப்போது இருபதாக அதிகரித்திருக்கிறது. சுயேச்சைப் பிரதிநிதியாக இருந்த மட்டக்களப்பு இரண்டாவது உறுப்பினர் திரு ராஜன் செல்வநாயகம் சமசமாஜக் கட்சியில் சேர்ந்துகொண்டதன் மூலம் ஆட்சிமன்றத்தில் அதன்பலம் அதிகரித்தது மட்டுமல்ல சமசமாஜக் கட்சிக்கு ஆட்சிமன்றத்தில் ஒரு தமிழ்ப்பிரதிநிதியும் இருக்கிருர் என்ற நிலையையும் ஏற்படுத்தியிருக்கிறது. எதிர்க்கட்சியிலுள்ள வேறு மூன்று தமிழ்ப்பிரதிநிதிகளும் லங்கா சமசமாஜக் கட்சியில் சேரவிருக்கிருர்களென்ற தகவலும் கட்சி வட்டாரங்களிலிருந்து கிடைத்திருக்கிறது. இது தவிர ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் அங்கம் வகித்து இன்று அமைச்சரவையிலும் ஆட்சிமன்றத்திலும் பொறுப்பான பதவி வகிக்கும் பலர் முன்னர் லங்கா சமசமாஜக்கட்சியிலிருந்தவர்களென்பதையும் இப்போது அரசாங்கம் மேற்கொள்ளும் தீவிர நடவடிக்கைகளுக்கு இவர்களது ஆதரவு நிறையஇருக்கிறதென்பதையும் அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர். கூட்டணியினரின் தேர்தல் விஞ்ஞாபனம் சமசமாஜக்கட்சியின் கொள்கைகளையே பெரும்பாலும் கொண்டிருப்பதாகவும் அவதானிகள் கருத்துத்தெரிவித்துள்ளனர்.

இலங்கை வீரர்

# ரேசாவுக்கு உபகாரச் சம்பளம்

பாங்கொக், டிச. 18

இலங்கை விளையாட்டு வீரரான திரு லூசியன் ரேசா ஜப்பானில் தாக்கா பல்கலைக்கழகத்தில் டிப்பிலமோ படிப்பதற்கான ஜப்பானிய உபகாரச் சம்பளம் கிடைக்கலாமெனத் தெரியவருகிறது இந்த உபகாரச் சம்பளம் 4 ஆண்களுக்குரியது. இதற்கான முயற்சிகளை ஜப்பானிய விளையாட்டுக்கழகத் தலைவர் செய்து வருவதாகத் தெரியவந்துள்ளது.

பாங்கொக்கில் நடைபெற்ற ஆசிய விளையாட்டு விழாவில் ஐயாயிரம், பத்தாயிரம்மீட்டர் ஓட்டப்போட்டிகளில்ஜப்பானிய விரர்களைத் தோற்கடித்து. முதலிடம் பெற்று இலங்கைக் ரேசா குப்புகழைத்தேடித்தந்தார்

ஆசியவிளையாட்டு விழாவில் வெற்றிபெற்ற வீரர்களில் இரு தங்கப்பதக்கங்களைப் பெற்ற ஒரே ஒருவர் இவர்தான். இதனுல் திரு. லூசியன் ரேசா சிறந்த வீரராக ஆசிய விளையாட்டு புள்ளிவிபரக் குழுவால் தெரிவு செய்யப்பட்டார்.

# வேலைவாய்ப்பு அளிக்கவே 55 வயது ஓய்வுத்திட்டம்

## தொழிற்சங்கப் பிரதிநிதிகளிடம் அமைச்சர் பீலிக்ஸ்

கோட்டை, வெள்ளி

அரசாங்க ஊழியர்கள் 55 வயதுடன் இளைப்பாற வேண்டும் எனக் கொண்டுவரப்பட்ட திட்டம் 55 வயதை அடைந்த ஊழியர்களுக்கு வேலையிழப்பை ஏற்படுத்தவேண்டும் என்ற நோக்கத்துடன் கொண்டுவரப்படவில்லை. வேலையின்றிக் கஷ்டப்படும் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பளிப்பதும் பதவி உயர்வை எதிர்நோக்கியிருக்கும் ஊழியர்க்குப் பதவி உயர்வை அளிப்பதுமே இத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

தனது இல்லத்தில் தன்னைச் சந்தித்த அரசாங்க எழுதுவினைஞர் சங்கம், ஒய்வுபெற்ற அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் முதலிய தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்குப் பதிலளிக்கையில் உள்ளூராட்சிமன்ற, பொதுநிர்வாக உள்ளூர் விவகார அமைச்சர் திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயகா மேற்கண்டவாறு கூறினுர்.

இத் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் 55 வயதுடன் ஊழியர்கள் ஓய்வுபெறுவதால் ஏற்படும் கஷ்டங்கள் குறித்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்ட பதிலளித்தார்.

55 வயதுடன் ஓய்வுபெறுபவர்களுக்கு நிவாரணம் வழங்கவேண்டும் எனவும் அவர்களின் தற்போதைய வேதன அடிப்படையிலேல்ய பென்ஷன் கணிக்கப்பட வேண்டும் எனவும் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் அமைச்சரைக் கேட்டுக்கொண்டனர்.

எழுதுவினைஞர் பதவிக்கு ஆட்சேர்ப்பு வேலை நடைபெறவிருக்கிறது எனவும் ஆட்சேர்பு வேலைமுடிந்ததும் எழுதுவினைஞர் சேவையில் பல மாற்றங்களை தான் செய்ய விருப்பதாகவும் அமைச்சர் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா தொழிற்சங்க பிரதிநிதிகளிடம் தெரிவித்துள்ளார்,

யாழ்ப்பாணம், சனி

பஸ்ஸில் தவறவிடப்பட்ட 2000 ரூபா பெறுமதியான பவுண் நகைகளைக்கண்டெடுத்து இ. போ. ச. காரியாலயத்தில் ஒப்படைத்த கண்டக்டருக்குபாராட்டுத்தெரிவித்துள்ளார் நகைகளின் சொந்தக்காரர்.

தமது சகோதரியின் திருமணத்தை முன்னிட்டு கொக்குவிலைச்சேர்ந்த எஸ். துரைராசா என்பவர் 2000 ரூபா நகைகளை எடுத்துக் கொண்டு பஸ்ஸில் பிரயாணம் செய்ததாகவும் திருநெல்வேலியில் பஸ்ஸை விட்டு இறங்கிய அவர் நகையை பஸ்ஸில் தவறவிட்டுவிட்டதை உணர்ந்ததாயும், பின்னர் யாழ். பஸ்டிப்போசென்று விசாரித்தபோது அவரது நகை அங்கு இருக்கக்காணப்பட்டதாயும் தெரியவந்தது.

குறித்தபஸ்ஸில் அப்பொழுது கடமையாற்றிய கொண்டக்டரான போயிட்டியைச் சேர்ந்த திரு. சின்னத்தம்பி என்பவர் பஸ்ஸில் தவறவிடப்பட்ட நகைகளைக் கண்டெடுத்து டிப்போவில் ஒப்படைத்தாராம்,

நகைகள் உரியவரிடம் ஒப்படைக்கப்பட்டன. (கு.வி.ம

# இன்று இ. போ. ச. வடபகுதி கூட்டுக்கமிட்டி கூடுகிறது

யாழ்ப்பாணம், சனி

இலங்கைப் போக்குவரத்துச்சபை ஊழியர்களின் வடபகுதித் தொழிற்சங்கக் கூட்டுக்கமிட்டியின் கூட்டம் இன்று யாழ்ப்பாணத்தில் நடைபெறுகிறது இக் கூட்டத்தில் லங்கா சமசமாஜக் கட்சியின் ஆதரவிலுள்ள தொழிற்சங்கப் பிரதிநிதிகள் கலந்துகொள்ள மாட்டார்களென்றும் மாஸ்கோ சார்பு கம்யூனிஸ்ட் கட்சி ஆதரவிலுள்ள தொழிற்சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொள்வார்களென்றும்தெரிகிறது.

இலங்கைப் போக்குவரத்துச்சபை ஊழியருக்குக் கிடைக்கவிருந்த போனஸ் இம்முறை வழங்கப்படமாட்டாதென அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஊழியரிடையே ஏற்பட்ட அமைதியின்மை பற்றியும் இம் மாநாட்டில் ஆராயப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆயினும் போனசுக்குப் பதிலாக முற்பணம் வழங்கப்பட்டதினுல் ஊழியரிடையே ஓரளவு அமைதி ஏற்பட்டுள்ளது என்றும் இதுவிடயத்தில் திருப்தி தெரிவிக்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

பாக் - இந்திய

## ஹாக்கிப் போட்டி

பாங்கொக், டிச. 19

பாங்கொக்கில் பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்குமிடையில் ஆசியஹாக்கி சாம்பியனுக்கான இறுதிப் போட்டி இன்று நடைபெறவிருக்கின்றது, இந்தப்போட்டி சம்பந்தமான நேர்முக வர்ணனையைஇந்திய வானொலி இன்று ஒலிபரப்பும்.

மாவிட்டபுரம், வெள்ளி

காணியில்லாது கஷ்டமுறும் சிறுபான்மைத் தமிழர்களுக்கு உடுவிலில் தரிசாகக் கிடக்கும்144பரப்புக் காணியை அரசினர் சுவீகரித்து வழங்க இருக்கின்றனர்.

இந்து சமுத்திரத்தில் அமெரிக்க தளம்

# இலங்கை - இந்திய விரோதத்தை கொண்டுவருவதாக இருக்கும்

## பிரி. தொழிற்கட்சி அங்கத்தவர் கண்டனம்

லண்டன், டிச. 19

இலங்கைக்கும் மொரீஷியஸ் தீவுக்குமிடையிலிருக்கும் டியாகோகார்சியா என்ற தீவில் அமெரிக்கத் தகவல் தொடர்புத் தளம் ஒன்றை அமைக்க விருக்கும் திட்டத்துக்கு பிரிட்டிஷ் அரசாங்கம் உடன்பாட்டுக்கு பிரிட்டிஷ் ஆட்சிமன்றத்தில் பலமான எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது

தொழிற்காட்சி அங்கத்தவர் திரு டாம்டலைல் இது சம்பந்தமாகப் பேசுகையில் இவ்வித முடிவு இலங்கைக்கு விரோதமான ஒரு நடவடிக்கையாக இருக்குமென்றும் பாரதத்தின் விரோதத்தையும் இது சம்பாரிப்பதாக இருக்குமெனவும் அவர் எடுத்துக்கூறினுர். இவ்வித முடிவு நேரடியாக இந்த நாடுகளைப்பாதிக்கும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இது விஷயமாக பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியுடன் கலந்தாலோசிக்கப்படவில்லை யெனவும் இவ்வித உடன்பாடு மோசமான விளைவுகளை ஏற்படுத்தும்எனவும் அவர் சுட்டிக்காட்டினுர்.

இதுசம்பந்தமாக அவசரமாக காமன்சபையில் விவாதிக்கப்பட வேண்டுமென திரு. டலைல் விடுத்த கோரிக்கையை சபாநாயகர் நிராகரித்தார்.

இந்த ஸ்கலர்ஷிப்பை ஏற்றுக் கொள்வதா இல்லையா என்பது பற்றித்தான் இன்னும் முடிவுசெய்யவில்லை என திரு. ரேசா தெரிவித்தார்.

பாப்பரசர் வருகை

# இலங்கை அரசுக்கு கருதினுல் நன்றி

கோட்டை, வியா

பாப்பரசர் 6வது சின்னப்பர் இலங்கைக்கு வருகை தந்தபொழுது அவருக்கு கௌரவம் அளித்து விழாவைச் சிறந்த முறையில் ஒழுங்கு செய்தமைக்காக மகா தேசாதிபதி திரு வில்லியம் கோபல்லவா, பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயகா. மற்றும் அவரது அமைச்சரவைக்கும்சங்கைக்குரிய கர்தினுல் தோமஸ் கூரே இலங்கைக் கிறிஸ்தவ மக்கள் சார்பில் நன்றி தெரிவித்துள்ளார்,

இலங்கை மக்களைக்கண்டு அவர்களுக்கு தனது வாழ்த்தையும் நட்புரிமையையும் கடமையையுப்செய்ய பாப்பரசர் விரும்பினுர் அவரது அந்த விருப்பத்தை நிறைவேற்றக்கூடிய முறையில் அவருக்கு மரியாதை செலுத்தி அவரது ஆசியை இலங்கையிலுள்ள கிறிஸ்தவ மக்களும் பிறமதச் சகோதரர்களும் பெற வாய்ப்பளித்தமைக்காக நன்றி தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

உங்களுக்கு காது கேட்கவில்லையா? காது கேட்க உதவும் கருவி(Hearing Aids) எம்மிடம் இப்பொழுது விற்பனையாகின்றது. சீடில்ஸ் (யாழ்ப்பாணம்) லிமிட்டெட், 122, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 2582

### விற்பனைக்கு

1. நாவற்குழி புகையிரத நிலையத்தில் இருந்து 50 யார் தூரத்திலுள்ள ஒவ்வொன்றும் 4 பரப்புக் கொண்ட இரு துண்டுக் காணிகள். 2. தென்னை, பா, பலா ஆகியன நிறைந்துள்ளதும் பளை புகையிரத நிலைய கைகாட்டி ஸ்தம்பத்துக்கு பக்கத்திலுமுள்ளதான 62 பரப்புக் காணியும் கல்வீடும். 3. தென்னை, வாழை, மா மற்றும் பழமரங்கள் பயிரிடப்பட்ட சுந்தரபுரத்தில் பரந்தன் முல்லைத்தீவு வீதியில் உள்ள 3 பங்குகளைக் கொண்ட 25 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. கடித மூலமாகவோ அல்லது நேரடியாவோ தொடர்பு கொள்ளவும். வின்ஸ்லோஸ், 149, பவர்கவுஸ் ரோட், யாழ்ப்பாணம். 2552

### விற்பனைக்கு

கார்:

ஈ. எல் 7265 சொமர்செட் முற்றிலும் புதுப்பிக்கப்பட்டது. டயர், பட்டரி, மை புதியது. டிசம்பர் 23-ந் திகதி 18 A, ஜானகி வீதி, பம்பலப்பிட்டியில் பார்வையிடலாம். எஸ். வீரசிங்க, கோயில் வீதி, ககபட்டா, (Kahapada) மடபாத. 2578

### பயிற்சி

மோட்டார் றீ வைண்டிங் தமிழில் பயிற்சி அளிக்கப்படும். வகுப்புகள் ஆரம்பம் 1-1-1971. விபரங்களுக்கு: இன்டஸ்றியல் கிராப்ட்ஸ் இன்ஸ்ரிரியூட், 443/5, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 2584

### கல்வி

வகுப்பு:

பின்னேரங்களில் ஆங்கிலமும் எண்ணும் பத்தாம் வகுப்பு வரையுமுள்ள மாணவர்களுக்குக் கற்பிக்கப்படும். 5-1-71 தொடக்கம் சிறுவர் பாடசாலையும் நடைபெறும். விபரங்களுக்கு: திருமதி சிவசுப்பிரமணியம், ஓய்வு பெற்ற ஆசிரியை, தலையாளி, கொக்குவில். 2431

வியாபாரம்பெருக விளம்பரம் செய்க

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்

எம்.ஜி.ஆர்—லட்சுமி ஜெயலலிதா — அசோகன் நடித்த

# மாட்டுக்கார வேலன்

மனோஹரா - யாழ்ப்பாணம்

தினசரி 3 காட்சிகள் போயா 4 காட்சிகள்

★ என். டி. ராமராவ் ★ கே. ஆர். விஜயா ஜோதிலட்சுமி ★ ராஜ்ஸ்ரீ நடித்த

# லட்சுமி கடாட்ஷம்

(பாஸ்கள், சலுகைகள் ரத்து)

யாழ். வின்ஸர் திரையில்

தினசரி 4 காட்சிகள்

★ ராஜன் ★ ரவிச்சந்திரன் ★ லட்சுமி

### யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் ஏல விற்பனை

1-1-1971 தொடக்கம் 31-12-1971 வரையுள்ள காலத்திற்கு, பெரியகடை மரக்கறிச் சந்தையிலுள்ள 89 ஏ எண்ணுள்ள அரைக் கடையை குத்தகைக்கு கொடுக்கப்பட இருப்பதால், இக்குத்தகையுரிமை 23-12-70, புதன் கிழமை காலை 10-30 மணிக்கு அவ்விடத்தில் வைத்துப்பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

இது சம்பந்தமான இதர தகவல்களை அலுவலகநேரத்தில் மாநகர அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

ஏ ரி சுந்தரம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

18-12-70. 2597

### மாநகராட்சி மன்றம் யாழ்ப்பாணம் கேள்விப் பத்திர அறிவித்தல்

முத்திரைச்சந்தையிலிருக்கும் கடை அறைக் குத்தகை - 1971

மேற்படி சந்தையிலிருக்கும் கடை அறையை 1971ம் ஆண்டு தைமாதம் 1ம் திகதி தொடக்கம் 1971ம் ஆண்டு மார்கழி மாதம் 31ம் திகதி வரையும் குத்தகைக்குக் கொடுக்கும் முகமாக கேள்விப்பத்திரங்கள், யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற ஆணையாளரால் 1970ம் ஆண்டு மார்கழி மாதம் 29ம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

இது சம்பந்தமாக மேலதிக விபரங்கள் அறியவிரும்புவோர் மாநகர ஆணையாளரிடமிருந்து அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

ஏ. ரி. சுந்தரம்
மாநகர ஆணையாளர்.

18-12-70 2596


......

### வீதி திருத்தினர்

உடுப்பிட்டி, வெள்ளி

அல்வாய் தெற்கு இலகடி என்னுமிடத்திலுள்ள ஒழுங்கை யொன்றை தென்-அல்வை வாலிப முன்னணியினர் சிரமதானமூலம் திருத்தினர்.

......

### இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

சனி 19—12—70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00,

# ஆத்திகம் வளர்க்கும் ஆசிரம மண்டபம்

# இறையருள் முழங்கிய விழா

மலையின் உச்சியில் ஊற்றெடுக்கும் பல நதிகள் மலையினின்றும் இழிந்து வரும் போது வழியெங்குமுள்ள இடங்களுக்குப் பயனூட்டி முடிவில் ஆழியுடன் ஐக்கியப்படுகின்றது.

இறைவனை நம்பும் சமயங்கள் பலவாயினும், முடிவில் ஏக இறைவனையே அடைய வழிகாட்டுகின்றன. இந்த உண்மையை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டதே உலக திவ்விய ஜீவன சங்கம்.

உலக திவ்விய ஜீவன சங்க மூல பிதாவான சிவானந்தர் கருணையே வடிவமாக வாழ்ந்தவர். அவர் இந்துவுக்கு இந்து, புத்தருக்குப் புத்தர், ஜைனருக்கு ஜைனர், கிறீஸ்துவுக்கு கிறிஸ்துவாக எது எவரோ அதுவானக அகில சமயோகச் சுடராக வாழ்ந்தவர்.

அத்திவ்விய மகானின் பெயரால் இலங்கையில் அமைக்கப்பட்ட திவ்விய ஜீவன சங்கத்தின் கிளையாக அமைந்தது யாழ்ப்பாண திவ்யசிவன சங்கம். இச்சங்கம் மக்களிடையே ஆத்மீக ஒருமைப்பாட்டை நிலை நிறுத்துவதற்கு அயராது தொண்டாற்றி வருவது நாடறிந்த உண்மையாகும்.

1961-ம் ஆண்டு சுவாமி சச்சிதானந்தாஜியினுல் யாழ்ப்பாணத்தில் திவ்யஜீவன சங்கத்துக்கு ஒரு மண்டபத்தை அமைக்க அஸ்திவாரக்கல்லு நாட்டப்பட்டது. கடந்த பத்தாண்டுகளாக ஆத்மீகப் பற்றுடையவர்களின் இடையரு முயற்சியின் பேருக இன்று யாழ்ப்பாணத்தில் யாவரையும் கவரக்கூடியதான ஆசிரம மண்டபமாக உருவாக்கப்பட்டுள்ளது.

இன்றைக்குரிஷிகேசத்தின் தவமாமுனிவராகவும் திவ்விய ஜீவன சங்கத்தின் ஸ்தாபகருமான ஸ்ரீசுவாமி சிவானந்த சரஸ்வதி மகராஜ் அவர்கள் சமாதியடைந்தபின்னர் திவ்விய ஜீவன சங்கத் தலைவராகவும் விளங்கும் ஸ்ரீ சுவாமி சிதா[illegible]ந்தஜீயைக் கொண்டு இம்மணிமண்டபம் திறக்கப்பட வேண்டுமென்ற உறுதியான தீர்மானத்தை எடுத்தனர் யாழ். திவ்யசீவன சங்க[illegible]

1[illegible]-ம் ஆண்டு [illegible] சிதானந்தஜீ யாழ்ப்பாணத்

அவன் இறைவனை நெருங்குவதற்குரிய ஒரே மார்க்கம் என்பதை ஸ்ரீசிதானந்தாஜி ஆங்கு இரத்தினச்சுருக்கமாகத் தெரிவித்தார்.

வெளிநாட்டினரிடமிருந்து தான்பெற்ற அனுபவத்தைப் பற்றி குறிப்பிட்ட ஸ்ரீசிதானந்தஜி கூட்டம் நடக்கும்போது ஒரு சிலர் பேசுவதைக்கண்டு ஐரோப்பியநாட்டவரிடத்திலிருந்துநாம்கற்றுக் கொள்ள வேண்டியவற்றுள் கூட்டத்தில்அமைதியாக இருப்பதும் ஒன்று என்ருர்.

இந்த முதல்நாள்விழாவில் பலசமயங்கள் சங்கமித்திருப்பதுபோல் நல்லூர் பிரதம குருக்கள் சிவஸ்ரீ சகுமாரசுவாமிக் குருக்கள் கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் சுவாமி ஸ்ரீ ரங்கானந்தஜி யாழ்ப்பாணம் நாகவிகாரை நந்தராம நாயகதேரோ, யாழ்ப்பாணம் துணை ஆயர் எல்.ஆர். அன்ரனிசேய்க் ரசடுக் ஹுசேன்லெப்பே மூதலியோர். சமய சமரசத்தின் உண்மையைப் புலப்படுத்தி அங்கிருந்தனர். ஒவ்வொரு சமயத்துப்பெரியார்களையும் ஸ்ரீசிதானந்தஜி வணங்கி மாலையிட்டார்.

12-ந்திகதி பிற்பகல்நிகழ்ச்சிகள் ஸ்ரீ சுவாமி ரங்கானந்தாஜி தலைமையில் நடைபெற்றன. திரு. சூரசங்கரன் வரவேற்புரை நிகழ்த்தினுர்.

வண. என், எம். சவரிமுத்து அடிகள், திரு. நாகமுத்தையா, கலாநிதி வித்தியானந்தன், திருப்பூங்குடி வி. க. ஆறுமுகம், சைவப்புலவர் ப.செல்லையா ஆகியோர் உரையாற்றினர்.

கடலுக்கு நடுவே பிரகாசிக்கின்ருன்.

அலை பாய்ந்துகொண்டிருக்கும் உள்ளங்களுக்கு ஆன்மீகத்தின் ஒளிதானே வழி காட்டவேண்டும்.

அமைதி தவழும் முகம், உண்மையான துறவினைப் பிரதிபலிக்கும் துவராடை, மென்மையான நகை, தேஜஸ் ஜொலிக்கும் உருவம். இவற்றின் மொத்த மானவர் தான் ஸ்ரீசிதானந்தாஜி' தன் தாள் தொடுகின்ற அனைவரது தாளையும் தொடுகின்ற பக்குவநிலை பெற்ற உண்மையான ஆத்மீகத் தலைவர். எல்லாம் இறைவன் என்ற ஏகாக்கிர சிந்தையின் மொத்தமே அவரென்ருல் உண்மைதான்

புன்னகை தவழும் பொன்முகத் திருவோன்
பொலிமிகு நல்லறி வாளன்
அன்னையின் அன்பும் அருள் வளர் நெஞ்சும்
அப்பரின் பணிநல வளமும்
முன்னிய முனிவன் சிவ சிதானந்தன்
முப்பொருள் வைப்பெனும் செல்வன்
என்னுளம் கலந்த இளந்திரு யோகி
இமய தின் புகழெ ன வாழ்க!

இவ்[illegible]று ஒருவர் சுவாமிஜியை வாழ்த்தியுள்ளமை உறுதியான உண்மையினைக் காட்டுகிறது.

### - இ. நாகராஜன் -

13ந் திகதி காலை 5 மணி தொடக்கம் எட்டரைமணி வரை சத்சங்கமும் சாதனையும் நடைபெற்றன.

மாலை திவ்வியஜீவன சங்கப்பிரதிநிதிகளுடன்ஸ்ரீசிதானந்தஜி சுவாமிகள் [illegible]ந்துரையாடினுர். ஆன்மீக[illegible]ம் விஞ்ஞானமும் என்றபொருளில் கவிஞர் இ நாகராஜன் தலைமையில் கவிஞர்கள் வே[illegible]ரை, செ. சுந்தரம் [illegible] முதலா[illegible]னுர் கவி[illegible] இசைத்தனர். கவிஞர்[illegible]

# ஓய்வுபெறும் ஆசிரியர்கள்

### திரு. அருணுசலம்

இவர் கரம்பன் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் தலைமையாசிரியராகக் கடமையாற்றுகிருர். கடமையுணர்ச்சிமிக்க இவர் இப்பாடசாலையின் முன்னேற்றத்துக்காகப் பெரும்பாடுபட்டவர். இதனுல் இவ்வூர் மக்களதும் சக ஆசிரியர்களதும் பாராட்டையும் நன்மதிப்பையும் பெற்றவர்.

0 0 0

### திரு. வீரகத்தி

திரு. வீரகத்தி அல்வாய் தெற்கு சின்னத்தம்பி வித்தியாசாலையின் உப அதிபராவார். பாடசாலை நிர்வாகத்தில் அதிபருக்குப் பக்கத் துணையாக விருந்து பெரிதும் உதவி செய்பவர். அவரது சேவையை பழைய மாணவர்களும் சக ஆசிரியர்களும் பெரிது[illegible] பாராட்டியுள்ளனர்.

0 0 0

### திரு.கா. வேலுப்பிள்ளை

34 வருட ஆசிரிய சேவையின் பின் திரு. கா. வேலுப்பிள்ளை ஓய்வு பெறுகிருர். ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாசாலையில் இவர் கடைசியாக

இவர் தனது வாழ்நாளில் 40 வருடகாலப் பகுதியை ஆசிரியப் பணிக்கே அர்ப்பணித்தார். ஆசிரியத் தொழிலில் சிறந்த அனுபவமும் ஆற்றலும் உள்ள இவருக்கு மாணவர் மத்தியில் என்றென்றும் நன்மதிப்புண்டு என்று கூறவேண்டுவதில்லை.

0 0 0

### திரு. அந்தோனிப்பிள்ளை

உரும்பராய் றேமன் கத்தோலிக்க பாடசாலையின் தலைமையாசிரியரான இவர் இக் கல்லூரியில் குறுகிய காலம் மட்டுமே சேவை செய்த போதிலும் இப்பாடசாலைக்காற்றிய சேவை ஆளப்பரியது, என அவரது பிரிவுபசாரத்தில் பேசிய சக ஆசிரியர்கள் யாவரும் பாராட்டிப் பேசினர். மாணவர்கள் ஒழுக்கமும் கட்டுப்பாடுமுடையவர்களாக இருக்க வேண்டும் என்ற நோக்கம் கொண்டு மாணவர்களை நல்வழிப்படுத்துதலையே தம் குறிக்கோளாகக் கொண்டு கடமையாற்றியவர்.

——

### ஆலோசனைக் கூட்டம்

### இலவச வெளியீடு

ஓங்கார வடிவினனை விநாயகனை உள்ளம்வைத்தே நல்லனவற்றை நாம் ஆரம்பிக்கவேண்டும். அந்த விநாயகப் பெருமானைப் பற்றிய வரலாறு பிரார்த்தனைக்குகந்த அகவலும், காவலாக அமைந்தகவசமும் கொண்ட இந்நூல் சைவமக்களுக்குப் பயன்தரவல்லது மட்டற்ற சமய சேவையின் 11-வது வெளியீடாக மில்க்வைற் சோப் ஸ்தாபனத்தார் இதனை வெளியிட்டமை பாராட்டற்குரியதாகும். பண்டிதமணி வித்துவான் ந. சுப்பையாபிள்ளை இந்நூலுக்கு அணிந்துரை தந்தமையே இதன் சிறப்புக்கோர் சின்னமாகும்.

—இ. நா.

—— ——

கோட்டை, வெள்ளி


சமீபத்தில் நடைபெற்ற கம்புறுப்பிட்டியா பட்டின சபைத் தேர்தலில் கம்யூனிஸ்ட் கட்சி அமோகவெற்றியீட்டியுள்ளது.

—— ——

### ராஜினுமா

உடுப்பிட்டி. வெள்ளி

உடுப்பிட்டிக் கிராமசபை அங்கத்தவர்களான திரு சி. ஈஸ்வரலிங்கப்பெருமாளும், திரு எஸ். சிவராசாவும் தமதுஅங்கத்தவர் பதவியை ராஜினுமாச் செய்துள்ளனர்



### கலைக்கழக நாடகக்குழு உறுப்பினர்

யாழ்ப்பாணம், சனி

இலங்கைக் கலைக்கழக தமிழ் நாடகக் குழு உறுப்பினராக சுன்னுகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி ஆசிரியர் திரு. ஆ. கல்யாணசுந்தரேசன் கலாச்சார அமைச்சரினுல் நியமிக்கப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

யாழ். வின்ஸர் திரையில்
தினசரி 4 காட்சிகள்
★ ராஜன் ★ ரவிச்சந்திரன்
★ லட்சுமி
★ நிர்மலா
★ நாகேஷ்
நடித்த
ஏன்?

யாழ். வின்ஸர், றீகல்
தியேட்டர்களில்
பரிசுத்த பாப்பரசர்
6-வது சின்னப்பரின்
இலங்கை விஜயம்
30 நிமிடங்களுக்கு எல்லாக் காட்சிகளுக்கும்
காண்பிக்கப்படுகின்றது.

கெப்பிட்டல் பிளாஸா மைலன்
திரைகளிலும்
யாழ். வெலிங்டன்
திரையிலும்
தினசரி பி.ப. 2-30, மாலை 6-30
இரவு 9-30, போயா நாட்கள்
காலை 10-30 மணி
ப. நீலகண்டனின் டைரக்ஷனில் உருவாகி
மக்கள் திலகம்
எம். ஜி. ஆர்.
ஜெயலலிதா
வாணிஸ்ரீ







முத்துராமன், அசோகன், சோ,
ஓ. ஏ. கே. தேவர் மற்றும்பலர் நடித்த
சத்யா மூவிஸ்
கண்ணன் என் காதலன்
தயாரிப்பு: ஆர். எம். வீரப்பன்
இசை: எம். எஸ். விஸ்வநாதன்


## ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**சனி 19—12—70**

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**344 மீ. அன்ட் 61 மீ.**

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 கிறிஸ்தவ நற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 குரல்வகை, 7-45 திரைகானம், 8-00 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள்,

**344 மீ. அன்ட் 49 மீ.**

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

**344 மீ. அன்ட் 61 மீ.**

மாலை 4-25 சங்கமம், 5-00 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-30 மாணவர்மன்றம்.

இரவு 6-15 இசைப்பயிற்சி, 6-30 விவசாய பிரச்னைகள், 6-45 சுகாதாரநிகழ்ச்சிகள், 7-00 நாட்டுப்பாடல்கள், 7-30 வயலின், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-20 பேச்சு, 9-30 நாடகம், 10-00 நேயர்விருப்பம், 10-30 செய்தித்தொகுப்பு.


ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
ஹாமினி பொன்சேகா
நடித்த
பரசுத்துமால்
(சிங்களம்)

இன்று மட்டும்
வெலிங்டன் சினிமா
மானிப்பாய்
தினசரி 2-30, 6-30, 9-30
எம்.ஜி.ஆர். - சரோஜாதேவி
நடித்த
படகோட்டி

ஸ்ரீகாலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 10-00
போயா நாட்கள் 2-30
கல்யாணகுமார் - விஜயகுமாரி
நடித்த
மணி ஓசை

REGAL
Jaffna
Daily 4-45, 7, 9-45 p. m.
Poya days 4 shows
LOST COMMAND


சிதா... ந்தஜியைக் கொண்டு இம்மணிமண்டபம் திறக்கப்பட வேண்டுமென்ற உறுதியான தீர்மானத்தை எடுத்தனர் யாழ். திவ்வியசீவன சங்க அமைப்பாளர்கள்.

1...-ம் ஆண்டளவில் ஸ்ரீ சிதானந்தஜீ யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தவிடத்து இம்மணி மண்டப திறப்பு விழாவில் தான் கலந்து கொள்வதாக அருளுரை வழங்கியிருந்தார், தெய்வ அவ்வுரை பொய்க்கவில்லை.

ஐக்கிய அமெரிக்கா, கனடா, தூரகிழக்கு நாடுகள், பிஜித்தீவுகள், நியூசிலாந்து, ஆஸ்திரேலியா பிலிப்பைன்ஸ், ஹொங்கொங், மலேசியா முதலான நாடுகளுக்கு சென்று அருட் பிரசங்கம் வழங்கி ஆன்மீகஒளியேற்றியஸ்ரீ சிதானந்தாஜி யாழ்ப்பாணத்துக்கு மணி மண்டபத்தைத் திறந்து வைக்க வருகை தந்தார்

இம்மாதம் 12-ம் திகதி காலை 10 மணிக்கு ஸ்ரீசிதானந்தாஜி லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட மணிமண்டபத்தை ஆத்மீக அருள் ஒளி பரப்பத் திறந்து வைத்தார். திவ்விய ஜீவன சங்கத்தின் மூலப்பிதாவான சிவானந்தாஜியின் சிற்பத்தை அழகுறச் செதுக்கி மேடையிலமர்த்தியிருந்தனர். ஸ்ரீசிதானந்தாஜி பக்தி சிரத்தையுடன் அத்திவ்விய சிற்பத்தையும் திறந்துவைத்தார்.

"பணம் என்பது ஒரு மனிதன் தான் செய்ததொழிலுக்கு ஏற்றவாறு பெற்ற ஓர் அடையாளமான்யம். இந்த அடையாள மான்யத்தைக் கொண்டு இன்னுமொரு மனிதன் செய்த தொழிலான ஒரு பொருளைப் பெறலாம். ஆனால் இன்று சரியான முறையிற் செய்யாத பொருட்களுக்குப் பணம் பெறுகின்றனர். சிலர் சொற்பமேனும் ஏதாவதொரு தொழிலும் செய்யாமல் பணம் பெறுகிறார்கள். இதனால் நல்லமுறையிற் செய்யும் தொழிலிலும் பார்க்கஇந்த அடையாள மான்யத்துக்கு மனிதனின் மதிப்புக் கூடியிருக்கிறது"

இக்கருத்தை அடக்கிய நல்லுரையுடன் ஆசிரம மண்டபத்தின் வரலாற்றை முதல்நாள் விழாவுக்குத் தலைமைவகித்தஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி திரு செ. தனபாலசிங்கம் குறிப்பிட்டார்

மனிதன், கடவுளை ஆலயத்துக்குச் சென்றால் மட்டும் காணமுடியாது. சர்வஜீவராசிகளிடத்தும் மனிதன் வைக்கின்ற அன்புதான், ... சுவாமிகள் துரையாடினார். ஆன்மீகமும் விஞ்ஞானமும் என்றபொருளில் கவிஞர் இ. நாகராஜன் தலைமையில் கவிஞர்கள் வே ஐயாத்துரை, செ. சுந்தரம் பிள்ளை முதலானோர் கவிதை இசைத்தனர். கவிஞர்களை வாழ்த்திய சுவாமி அவர்கள் கவிஞர்களுக்கு பிரசாதம்வழங்கி கௌரவித்தார் மட்டக்களப்பு, கண்டி, திருகோணமலை, கொழும்பு ஆகிய இடங்களிலுள்ள திவ்வியஜீவன சங்கப்பிரதிநிதிகளின்கருத்துரையும் இடம் பெற்றது.

14ந் திகதி மாலைநிகழ்ச்சிகளுக்கு சிவானந்த சச்சிதானந்த மாதாஜி தலைமைவகித்தார். செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, வேதவல்லி கந்தையா ஆகியோர் பேசினர். ஸ்ரீ சுவாமி சிதானந்த சரஸ்வதி மகராஜ் அவர்களின் நிறைவான அருளுரையும் நடைபெற்றது.

விழாக்கள் நடைபெற்ற தினங்களில் மகேஸ்வரபூசை நடைபெற்றது. ஆயிரக்கணக்கான அடியார்கள் அதில் பங்குபற்றினர்.

இந்த விழாவில் ஆன்மீகத்தின் பலம் தெரிந்தது. லட்சக்கணக்கான ரூபாய் செலவிட்டு அமைத்த மண்டபமே மக்களின் குன்றாத பக்தியின் சின்னமல்லவா. எங்கும் ஈசன் என்ற வார்த்தையே அங்கு ஒலித்தது.

திவ்விய ஜீவன சங்கத்தின் தத்துவத்தைப் பிரதிபலிக்கும் சின்னமாக அகன்று விரிந்த தாமரை மலருக்கு உள்ளே அழகுற அமைக்கப்பட்ட மின்விளக்கின் சக்தியினால் சதா சூரியன் அலை...

## ஊர்காவற்றுறை ஐ. சோ. மு. நிர்வாகிகள்

ஊர்காவற்றுறை, வெள்ளி

புளியங்கூடல் மகாமாரி அம்பாள் கோவில் வடக்கு வீதி மண்டபத்தில் நடைபெற்றஊர்காவற்றுறைத் தொகுதி ஐக்கியசோஷலிச முன்னணியின் அமைப்புக் கூட்டத்தில் பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு வி சிவசம்பு, உபதலைவர்கள்: திரு மு பொன்னம்பலம், திரு ம கந்தசாமி, திரு வி பொன்னுச்சாமி' இணைக்காரியதரிசிகள்: திருவாளர்கள் கே துளசிகாமணி, நடராசா, ந நாகராசா, பொருளாளர்: திரு இ மாணிக்கம் ஜே.பி. பிரசாரக்காரியதரிசி திரு மு தளையசிங்கம், நிர்வாகசபையொன்றும் அமைக்கப்பட்டது.

## திரு.கா. வேலுப்பிள்ளை

34 வருட ஆசிரிய சேவையின் பின் திரு. கா. வேலுப்பிள்ளை ஓய்வு பெறுகிறார். ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாசாலையில் இவர் கடைசியாக தலைமையாசிரியராகக் கடமையாற்றினார். களுத்துறை மகாவித்தியாலயத்தில் தனது ஆசிரியப் பணியை ஆரம்பித்த இவர் திருகோணமலை பனங்கட்டி முறிப்பு வித்தியாலயம், மட்டக்களப்பு கறுக்காமுனை வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் இவர் உதவி ஆசிரியராகக் கடமையாற்றினார். நெடுங்கேணி வித்தியாலத்திலும், வவனியா வரக்களாம்பளை வித்தியாலயத்திலும் நெடுங்கேணி ஆயிலடி வித்தியாலயத்திலும், மானிப்பாய் இந்துக்கல்லூரி கனிஷ்ட பிரிவிலும், ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயத்திலும் இவர் தலைமை ஆசிரியராகக் கடமையாற்றியுள்ளார். 19 வருட காலம் திரு. கா. வேலுப்பிள்ளை தலைமை ஆசிரியராகப் பணி புரிந்துள்ளார்.

0 0 0

## திரு. ஜே. எஸ். சிதம்பரப்பிள்ளை

புத்தூர் மெதடிஸ் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் தலைமையாசிரியரான ... கள் நல்வழிப்படுத்து தலையே தம் குறிக்கோளாகக் கொண்டு கடமையாற்றியவர்.

## ஆலோசனைக் கூட்டம்

யாழ்ப்பாணம், சனி

அரசின் உற்பத்தி வரித் திட்டத்தால் தொழிலதிபர்கள் வேலை நாளை மட்டுப்படுத்தி வருவதனால் வேலை வாய்ப்பு இல்லாமல் கஷ்டப்படும் சுருட்டுத் தொழிலாளரின் நிலைமை பற்றி ஆலோசிக்க உடுவில் கிராமசபை திறந்த வெளியரங்கில் இன்று 19-ந் திகதி பகிரங்கக் கூட்டமொன்று நடைபெறவிருக்கிறது.

... இலங்கைக் கலைக்கழக தமிழ் நாடகக் குழு உறுப்பினராக சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி ஆசிரியர் திரு. ஆ. கல்யாணசுந்தரேசன் கலாச்சார அமைச்சரினால் நியமிக்கப்பட்டுள்ளார்

இலங்கை கலைக்கழகத்தினர் 1965-ல் நடாத்திய அகில இலங்கைப் பாடசாலை நாடகப் போட்டியில் இவரின் நாடகம் இரண்டாவது பரிசைப் பெற்றது. சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி நாடகமன்ற செயலாளரான இவர், கொழும்பு அமைச்சூர் நாடகமன்ற ஸ்தாபகர்களில் இருவர், இவர் ஒரு தரமான நடிகர் நல்ல பேச்சாளர், நாடகத் தயாரிப்பாளர், எழுத்தாளர்


நத்தார் - புதுவருட
மலிவு விற்பனைக்காக
புதிதாக வரவழைக்கப்பட்ட
* நைலக்ஸ் சேலைகள் * றெற்றன் சேட்டுணி
* றெற்றன் சூட்டிங்ஸ் * கிளேஸ்கொட்டன்ஸ்
டயரும்ஸ்
54 — 60, மெயின் வீதி, யாழ்ப்பாணம்.

நத்தார் பண்டிகையை
நலமுடன் கொண்டாட
உங்களுக்கும் உங்கள் குழந்தைச் செல்வங்களுக்கும் உகந்த
★ கைத்தறி டெக்கா ★ பிறின்ரட் நைலக்ஸ்
★ சிலோன் மணிப்புரி ★ பிளேன் நைலக்ஸ்
★ அப்பலோ செக் சேட்டிங் ★ பெயின்ட் நைலக்ஸ்
★ ஜொயின்ட் நைலக்ஸ் ★ றெடிமேட் புளவ்ஸ்
சேட்டிங் — சூட்டிங் — சன்சூட்ஸ்
மற்றும்
சகலவிதமான ஜவுளி வகைகளும் கண்கவர் வண்ணக் கலர்களில்
எமது கைவசமுண்டு.
உங்களின் நத்தார் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள
எம்மிடம் விஜயம் செய்யுங்கள்.
சீப்சைட்
(வடஇலங்கையின் புகழ்பெற்ற புடைவை மாளிகை)
186-188, கே. கே. எஸ். றோட் — யாழ்ப்பாணம்.
(போன்: 479)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போலந்தில் பந்தோபஸ்து படைகளுக்கு சுட அதிகாரம்!

வார்ஸோ, டிச. 18

போலந்தில் வன்முறைச் சம்பவங்களை நிறுத்துவதற்குப் பந்தோபஸ்துப் படைகளுக்குச் சுடும்படி உத்தரவு அளிக்கப்பட்டுள்ளது.

போலந்தின் கடற்கரைப் பகுதிகளில் கொள்ளையடித்தல், தீ வைத்தல், பொதுச் சொத்துக்களை நாசப்படுத்தல் போன்றவற்றை நிறுத்திக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்குப் பந்தோபஸ்துப் படைகளுக்கு இந்த அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

விலைவாசி உயர்வின் எதிரொலியே இந்தச் சம்பவங்களுக்குக் காரணமெனச் சொல்லப்படுகிறது.

பந்தோபஸ்து படைகளுக்கும் பொதுமக்களுக்குமிடையில் பலத்த மோதல்கள் இடம்பெற்றுள்ளன. இரு பகுதியினரும் காயத்துக்குள்ளாகியுள்ளதாகவும், நூற்றுக்கணக்கானவர்கள் மாண்டதாகவும் அதிகாரபூர்வமற்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

கலவரத்துக்குள்ளான டான்ஸ்க் துறைமுகத்தில் நிருபர்கள் செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அங்கு வெடிச் சத்தம் கேட்டுக்கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த திங்கட்கிழமை ஆரம்பமான இந்த நிகழ்ச்சிகள் இப்போது உச்சக்கட்டத்தை அடைந்துள்ளன.

கடைகள் கொள்ளையடிக்கப்பட்டு, கட்டடங்கள் நொறுக்கப்பட்டும், தீவைக்கப்பட்டும், கார்கள் உடைக்கப்பட்டும், தண்டவாளங்கள் தகர்க்கப்பட்டும் வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்றுள்ளன.

பல நகரங்களில் இப்போது ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# இலக்கியப் பரிசு ஆயிரம் பவுண்!

லண்டன், டிச. 18

1000 பவுண் சாம்ராஜ்ய இலக்கியப் பரிசு இம்முறை பிரிட்டிஷ் எழுத்தாளரான ஜோன் பவுல்ஸின் நாவலொன்றிற்கு வழங்கப்பட்டுள்ளது. 'த பிரெஞ்ச் லெப்டினன்ட் வுமன்' எனப்படும் இந்நாவல் விக்டோரியா காலத்து இங்கிலாந்தின் பின்னணியில் எழுதப்பட்ட ஒரு சுவையான காதல் கதையாகும்.

தலைசிறந்த ஆங்கில இலக்கியப் படைப்பாக வர்ணிக்கப்படும் இந்நாவல் 1969-ம் ஆண்டில் பிரசுரிக்கப்பட்டது. லண்டனில் நடைபெற்ற வைபவம் ஒன்றின்போது எழுத்தாளர் பவுல்ஸ் பிரிட்டிஷ் கலாமன்றத் தலைவரான கூட்டன் பிரபுவிடமிருந்து இந்தப் பரிசைப் பெற்றுக்கொண்டார்.

நீண்டகாலமாக ஆங்கில மொழிப் போதனாசிரியராக பணியாற்றிவரும் பவுல்ஸ் 1963-ம் ஆண்டிலிருந்தே எழுத்துத்துறையில் பிரவேசித்தார். அவரது முதல் நாவலான 'த கொலெக்டர்' ஒரு சிறந்த இலக்கிய முயற்சியாகக் கணிக்கப்பட்டது.

பிரபல புத்தக விற்பனையாளரான டபிள்யூ. எச். சிமித் அன்ட் கம்பனி ஸ்தாபனத்தார் கடந்த 12 வருடங்களாக இந்த இலக்கியப் பரிசை வழங்கி வருகிறார்கள். சாம்ராஜ்ய நாட்டுப் பிரஜைகளான எழுத்தாளர்கள் அனைவரும் இந்த இலக்கிய பரிசுப் போட்டியில் கலந்துகொள்ளலாம்.

ஹாக்கி

# இந்திய கோஷ்டியிடம் பாகிஸ்தான் தோற்றது

பாங்கொக், டிச. 18

பாகிஸ்தான் கோஷ்டியை இந்தியா தோற்கடித்தது. இங்கு நடைபெறும் ஆசிய விளையாட்டுப்போட்டியின் [illegible] கத்தைத்தட்டிக் கொண்டுள்ளது. ஒரு கோலால் இந்தத் தங்கப்பதக்கத்தை தட்டிக்கொண்டது.

[illegible]

## தமிழ்நாடு இசைவிழா

சென்னை, டிச. 18

தமிழ்நாட்டின் இசை விழாக்கள் மியூசிக் அக்கடமியின் ஆதரவின்கீழ் அக்கடமி மண்டபத்தில் இன்று 19-ம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகி நடைபெறும். சங்கீத விதூஷி ஸ்ரீமதி டி. கே. பட்டம்மாள் தலைமையில் ஆரம்பமாகும் இவ்விழாவை கேரள கவர்னர் திரு வி. விஸ்வநாதன் ஆரம்பித்து வைப்பார்.

இன்றைய நிகழ்ச்சிகள்;

பிற்பகல் 6-15 குமாரி அனிதா இரத்தினம், குமாரி பிரிதா இரத்தினம், ஆகியோரின் பரதநாட்டியம்.

இரவு 8-30 ஆர். ஜெய்சங்கர் - நாதஸ்வரம், வலையாபதி ஏ. ஆர். சுப்பிரமணியமும், முனிராமையாவும் தவில். (இமை. நிரு)

## 'பாடசாலையைப் பாதுகாப்பது மக்கள் கடமை'

ஊரதீவு, வெள்ளி

"தனது கிராமத்திலேயுள்ள ஆலயங்களை ஒருகுடியானவன் எங்ஙனம் தூய்மையானதாக வைத்திருக்கிறானோ, கோயிற் பொருட்களை எங்ஙனம் பாதுகாக்கின்றானோ அதேபோல் பாடசாலைகளின் பொருட்களையும் ஒவ்வொரு கிராமத்தவரும் பாதுகாக்கவேண்டும். ஆலயங்களுக்குச் சமமான பாடசாலைகளைப் பேணிபாதுகாப்பது மக்களின் கடமைகளுள் ஒன்றாகும்" என்று புங்குடுதீவு ஸ்ரீகமலாம்பிகை வித்தியாசாலைப் புதிய கட்டடத்தைத் திறந்துவைத்து உரையாற்றிய தீவுப்பகுதி வட்டாரக் கல்வி அதிகாரி திரு. அ சி. நல்லையா கூறினார்.

பிரம்மஸ்ரீ க. சாமிநாதசர்மா வேதபாராயணம்ஓத திரு. நல்லையா மங்கல நாடாவை வெட்டிக் கட்டிடத்தைத் திறந்துவைத்தார் வித்தியாசாலை மாணவிகளின் கலைநிகழ்ச்சிகளும் விழாவில் இடம்பெற்றன. தலைமையாசிரியர் திரு. க. சொக்கலிங்கம் நன்றியுரை கூறினார். வேறு பலரும் உரையாற்றினர்.

## அரிசிக் கப்பல்

காலி, வெள்ளி

[illegible]

பாரத பொதுத் தேர்தல்:

# ஒலிபரப்பு மூலம் கொள்கை திட்டங்கள்

புதுடில்லி, டிச. 18

பாரதத்தில் ஐந்தாவது பொதுத் தேர்தலின்போது அங்கீகரிக்கப்பட்ட தேசியக் கட்சிகளுக்கு ஒலிபரப்பு மூலம் பொது மக்களுக்குக் கொள்கைத் திட்டங்களை விளக்க இடமளிக்கும் திட்டமொன்றை தேர்தல் கமிஷனர் தயாரித்துள்ளார்

பாரதப் பொதுத்தேர்தலுக்கு இன்னமும் பதின்மூன்று மாதங்களே உள்ளன இரு காங்கிரஸ் கட்சி உட்பட எட்டு அங்கீகரிக்கப்பட்ட தேசிய கட்சிகளுக்கு வானொலியில் கொள்கைத் திட்டங்களை ஒலிபரப்ப 10 நிமிடம் ஒதுக்கலாமென்றும் ஒரு கட்சிக்கு பத்து நிமிடப்படி 4 தடவைகள் ஒதுக்கலாமென்றும் தெரிவித்துள்ளார்

அடுத்த பொதுத்தேர்தலில் 30 கோடி வாக்காளர் இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது

— —

## இடமாற்றம்

வல்வெட்டித்துறை, வெள்ளி

பருத்தித்துறை மாஜிஸ்திரேட் கோர்ட்டைச் சேர்ந்த மூவருக்கு அடுத்த மாதத்திலிருந்து இடமாற்றம் கிடைத்துள்ளது. சுருக்கெழுத்தாளராகக் கடமையாற்றிவரும் திரு. த ஜீவானந்தம் அனுராதபுரம் மாவட்ட நீதிமன்றத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். அவரது இடத்திற்கு மன்னார் நீதிமன்றத்திலிருந்து திரு. எம். பெஞ்சமின் நியமனம் பெற்றுள்ளார். தட்டெழுத்தாளராகக் கடமையாற்றிவரும் திரு. ஏ. எஸ் கதிரவேற்பிள்ளை நாரம்பிட்டியா போக்குவரத்து நீதிமன்றத்திற்கும், அவரது இடத்திற்கு அதே நீதிமன்றத்திலிருந்து திரு. அந்தோனிப்பிள்ளையும் இடமாற்றம் பெற்றுள்ளனர். லிகிதராகக் கடமையாற்றி வரும் திரு. எம் தியாகராசா பொலநறுவை நீதிமன்றத்திற்கும் இடமாற்றம்பெற்றுள்ளார்.

0 0 0

முல்லைத்தீவு, வெள்ளி

முல்லைத்தீவு அரசினர் வைத்தியசாலையில் மலேரியா தடுப்புப் [illegible] கத்தராகக் [illegible] திரு. சுப்பிரமணியம் [illegible]

கல்முனை

## ஆசிரியர் இடமாற்றசபை தீர்மானம்

சாய்ந்தமருது, வெள்ளி

கல்முனை கல்வி மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் இரு வருடங்கள் கடமையாற்றிய ஆசிரியர்கள் அவர்கள் விரும்பினால் மேற்படி மாவட்டத்துக்குள் இடமாற்றம் செய்யப்படுவர்.

கல்முனைக்கல்விக் காரியாலயத்தில் தலைவர் ஜனாப் எஸ். எம். ஏ. கபூர் தலைமையில் நடைபெற்ற கல்முனை மாவட்ட இடமாற்றசபையின் கூட்டத்தில் இம்முடிவு செய்யப்பட்டது.

கல்முனைமாவட்ட இடமாற்றச்சபையின் தலைவராக கல்முனை கல்விமாவட்ட பிரதம கல்வியதிகாரி ஜனாப் எஸ். எம். ஏ. கபூர் நியமிக்கப்பட்டுள்ளார். இச்சபையில் இடம்பெறும் ஏனையோர் பெயர்கள் வருமாறு: ஜனாப் கே. எல். சின்னலெவ்வை (கல்முனை கல்விக் காரியாலய கல்வியதிகாரி), ஜனாப் ஏ ஸி, எம். இப்ருகீம் (கிழக்கிலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கப்பிரதிநிதி), ஜனாப் யூ. எம். இப்ருகீம் (உயர்தர பயிற்றப்பட்ட ஆசிரியர் சங்கப் பிரதிநிதி), ஜனாப் ஏ. முஸம்மில் (கல்முனை ஜாதிகுருசங்கக் கிளைப்பிரதிநிதி).

......

## விசேஷ தபால் தலை

கோட்டை, வெள்ளி

சர்வதேச கல்வி ஆண்டை முன்னிட்டு இலங்கை தபாற்பகுதி இம்மாதம் 21-ம் திகதி விசேஷ தபால் தலையொன்றை வெளியிடவுள்ளது.

யுனெஸ்கோவின் வேண்டுகோளுக்கிணங்கவே மேற்படி தபால் தலையை இலங்கை அரசாங்கம் வெளியிடுகிறது. திரிபீடகம் எழுதப்பட்ட காலத்திய பௌத்த நிகழ்ச்சி இத்தபால்தலையில் சித்திரிக்கப்பட்டிருக்கும்.

21-ம் திகதி காலை கொழும்பு பிரதம தபால் நிலையத்தில் இத்தபால்தலை வெளியிடப்படும். தபால் அமைச்சின் நிரந்தரக்காரிய [illegible]

"காமராஜர் டில்லி சென்றதுபோல்

# அண்ணாவின் தம்பிகள் பயந்து எங்கும் ஓடமாட்டோம்"

— கருணாநிதி

சென்னை, டிச. 18

'1965ல் நூற்றுக்கணக்கில் பிணங்கள் விழுந்த விழுந்தபோது அதைப்பற்றி கிஞ்சித்தேனும் கவலைப்படாமல், காமராஜர் டில்லிசென்றதுபோல, நாங்கள் எங்கும் பயந்து ஓடிப்போகமாட்டாம். அண்ணாவின்தம்பிகள் யாரும் அபபடிச்செய்யமாட்டார்கள். அதற்கு உதாரணம்தான் அனைத்துக்கட்சி தலைவர்கள் மகாநாடு'.

தமிழ் போதனாமொழி என்ற தமிழக அரசின் முடிவை எதிர்த்து தமிழகத்தில் மாணவர்கள் சமீபத்தில் நடத்திய ஆர்ப்பாட்டம் குறித்து இவ்வாறு கூறினார். தமிழ்நாடு முதலமைச்சர் திரு மு. கருணாநிதி.

அவர் மேலும் கூறியதாவது;-

காங்கிரஸ் காரர்களுக்கு இன்று எந்தப்பிரச்னையும் கிடைக்கவில்லை. பாடமொழி போதனாமொழி என்று இதைப் பிடித்துக்கொண்டு அலைகிறார்கள். மாணவர்களைக் கொண்டு இந்த அரசைக் கவிழ்க்கலாம் என்று மனப்பால் குடிக்கிறார்கள். 1965-ல் சிதம்பரத்தில்மாணவர் ராஜேந்திரனைச் சுட்டகரம் காங்கிரஸினுடையது. அதை மாணவர்கள் சமுதாயம் மறந்துவிடவில்லை. மாயவரத்தில் பிறந்த சாரங்கபாணி என்ற மாணவன் 'தமிழ் வாழ்க. இந்தி ஒழிக' என்று தீக்குழித்துச் செத்தானே-அதைப்பார்த்து கேலிசெய்த காங்கிரஸை மாணவர் சமுதாயம் மறந்துவிடுவதற்கில்லை.

இன்று காங்கிரஸ் காரர்கள் தமிழ் திணிக்கப்படுகிறது என்கிறார்கள். தாய்மொழி போதனாமொழி என்றால் அதற்கு திணிப்பு என்பது பொருள்அல்ல. திணிப்பு என்பதற்கு பொருள் என்னவென்று புரியாத காமராஜர் நம்மைப்பார்த்துதமிழைத் திணிக்கிறோம் என்கிறார்.

இன்று "தமிழைத் திணிக்காதே' என்றுகூச்சல்போடுகிறார்காமராஜர்' மக்களாட்சி' என்றநூல்மூலம் காமராஜருடையபொன்மொழிவெளியிடப்பட்டுள்ளது, தாய்மொழியே போதனாமொழியாகவேண்டுமென்று அதில் குறிப்பிட்டுள்ளார்.

ஆங்கிலத்தை அறவே அகற்றவேண்டுமென்றுநாம் சொல்லவில்லை.

இன்னும் இதற்குமேல் அவர்கள் ஏதாவது விளக்கம் தருவார்களானால், அதனையும் தரட்டும் என்றுதான் சர்வகட்சி மகாநாடு ஒன்றினைக் கூட்டியுள்ளோம்.

## "வகுப்பு வாதத்தால் உரிமைபெற முடியாது"

ஊர்காவற்றுறை, வெள்ளி

'அரசாங்கத்துடன் தமிழர்கள் ஒத்துழைத்து சிங்களச்சகோதரர்களின் நல்லெண்ணத்தைப் பெறவேண்டும். இதன் மூலம் தான் உரிமையைப் பெற முடியும். வகுப்புவாதம் பேசி உரிமை பெறமுடியாது.'

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தீவுப்பகுதி அமைப்பாளரான திரு. ப. கதிரவேலு புங்குடுதீவில் நடைபெற்ற [illegible]

# பண்டாரநாயக்கா கட்டிட வேலையில் வடபகுதி இளைஞர்கள்

யாழ்ப்பாணம், சனி

பௌத்தலோக மாவத்தையில் நிறுவப்படவிருக்கும் பண்டாரநாயகா ஞாபகார்த்த கட்டட வேலையில் யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து 200 தொண்டர்கள் பங்குபற்றுவார்கள்.

இத்தீர்மானம் யாப்பாண மாவட்டத்தில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது 30 கிளை அங்கத்தவர்கள் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

# சனசமூக நிலையங்களின் சமாஜ தீர்மானங்கள்

யாழ்ப்பாணம், சனி

வானொலியில் சனசமூக நிலையங்களை பங்குகொண்டு நிகழ்ச்சிகளை ஒலிபரப்புவதற்கும், நிலையங்களுக்கு வானொலி மற்றும் உபகரணங்கள்வழங்கும்படி கலாசார அமைச்சரை கோருவதென யாழ். மாவட்ட சனசமூகநிலையங்களின் சமாசப் பொதுச்சபை கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

உள்ளூராட்சி உதவிஆணையாளர் காரியாலயத்தில் திரு. வ. சுப்பையா தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் கலாச்சார மந்திரியை சந்திக்க ஒரு குழுவை தெரிவு செய்வதென்றும் முடிவு செய்யப்பட்டது.

இக்கூட்டத்தில்கீழ்க்காணும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறின. காரியாதிகாரிகள் பிரிவுகள் மூலம் விளையாட்டுநாடகம்வைத்து இறுதியாக மாபெரும் தேசிய விழாவொன்றை நடாத்தி அவ்விழாவிற்கு கலாச்சார மந்திரியை அழைப்பது.

## ரூபா 500 அபராதம்

ஊர்காவற்றுறை, வெள்ளி

ஆனைக்கோட்டை வாசியான ஒருவர் தமது கடையில் ஒரு இருத்தல் சின்ன வெங்காயத்தை 45 சதமாக விற்ற குற்றத்திற்கு யாழ்ப்பாணம் நீதவான் 500 ரூபா அபராதம் விதித்ததோடு ஒரு வருட நல்நடத்தைப் பிணையில் செல்லுமாறும் கட்டளையிட்டார்.

......

## இணைகின்றன

உடுப்பிட்டி, வெள்ளி

அல்வாய் அம்பிகா வித்தியாசாலையும், அல்வாய் மெதடிஸ்தபாடசாலையும் அடுத்தவருடம் முதல் இணைக்கப்பட்டு ஒரே பாடசாலையாக இயங்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பாகிஸ்தான் தோற்றது

பாங்கொக், டிச. 18

பாகிஸ்தான் கோஷ்டியை இந்தியா தோற்கடித்தது. இங்கு நடைபெறும் ஆசிய விளையாட்டுப்போட்டியின் 7-வது தினத்தன்று பாகிஸ்தான் கோஷ்டிக்கும்: இந்திய கோஷ்டிக்குமிடையில் நடந்த இறுதி ஹாக்கிப் போட்டியில் இந்தியகோஷ்டி வெற்றி பெற்றது: இதன் மூலம் இந்தியக்கோஷ்டி மேலும் ஒரு தங்கப்பதக்கத்தைத்தட்டிக் கொண்டுள்ளது. ஒரு கோலால் இந்தத் தங்கப்பதக்கத்தை தட்டிக் கொண்டது.

ஹாக்கிப் போட்டியில் தாய்லாந்து கோஷ்டியுடன் மோதிய இலங்கை கோஷ்டி 1 கோலைப்போட்டு வெற்றி பெற்றது. இதனையடுத்து சிங்கப்பூர் கோஷ்டியுடன் 5-ம் இடத்துக்காக இலங்கை மோதும்.

# "தமிழ் மொழிக் கொள்கையை தொடர்ந்து அமுல்நடத்துக"

### அகிலஇலங்கை கல்விக்கழகம் தமிழ்நாடு அரசுக்குகடிதம்

கோட்டை, வெள்ளி

தமிழ்நாடு கல்லூரிகளில் தமிழ்மொழி போதனு மொழியாக்க எடுத்தமுயற்சியைப் பாராட்டுவதாகவும் பிற்போக்கு சக்திகளின் தூண்டுதலின் பேரில் கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ள சில மாணவர்களின் சலசலப்புக்கு அஞ்சாமல் அரசின் கொள்கையை அமுல்நடத்தும் படியும் அகில இலங்கை கல்விக்கழகத்தின் தலைவர் திரு ச. ந. கதிர்காமநாதன், தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. கருணாநிதிக்கு அனுப்பிவைத்துள்ள கடிதமொன்றில் தெரிவித்துள்ளார்.

அகில இலங்கை கல்விக் கழகம் திரு. கருணாநிதிக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் கூறப்பட்டுள்ளதாவது:-

'தங்கள் முயற்சியை எதிர்த்து பிற்போக்கு சக்திகளின் மாயவலையில் அகப்பட்ட சில மாணவர்களால் ஏற்பட்ட கிளர்ச்சியை இட்டு மனம் வருந்துகின்றோம்.

எமது நாட்டில் பாலர் வகுப்பில் தொடக்கம் பல்கலைக்கழகக் கல்வி ஈறுக தமிழ் மாணவர்களுக்கு தாய்மொழியிலேயே கல்வி கற்பிக்கப்படுகின்றது. 1962-ம் ஆண்டிலிருந்து பல்கலைக்கழகங்களில் கலைப் பாடங்கள் தமிழ் மாணவர்களுக்கு தமிழ்மொழியிலேயே கற்பிக்கப்பட்டு வந்துள்ளது. இதுபெரும் வெற்றியை அளித்துள்ளதென்பது தெரிந்ததே. இந்த வெற்றியைத் தொடர்ந்து விஞ்ஞான, பொறியியல், மருத்துவ பட்டக்கல்வி உட்பட இவ்வாண்டு தொடக்கம் தமிழ்மொழியில் போதிக்கப்பட எமது கல்வி அமைச்சுநடவடிக்கை எடுத்துள்ளது. இப்படிப்பட்ட நடவடிக்கையால் தமிழ் மாணவர்களது சிந்தனை வளம் பெற்று வருவதோடு தமிழ்மொழியும் வளர்ந்து வர வாய்ப்புக்கள் உருவாகி உள்ளன.

தங்கள் கொள்கையை. சிறுசலசலப்புக்கும் அஞ்சாது அமுல் நடத்தும்படி வேண்டுகின்றோம். கலை, விஞ்ஞான கலைச்சொல்லாக்கத்தில் பொதுவான ஒருமைப்பாடுள்ள கொள்கையைக் கடைப்பிடிக்கும் வண்ணம். கேட்டுக்கொள்ளுகிறோம்.'

## பிரிவுபசாரம்

யாழ்ப்பாணம், வெள்ளி

வட்டுக்கோட்டை அரசினர் மத்திய மருத்துவமனையில் அப்போதிக்கரியாகக்கடமையாற்றி பதுளைக்கு இடமாற்றம் பெற்றுச் செல்லும் திரு. வி. கனகரத்தினத்திற்கு வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி மண்டபத்தில் பிரிவுபசாரமளிக்கப்பட்டது. இவ்வைபவத்திற்குப் பண்டிதர் த. சுப்பிரமணியம் தலைமை வகித்தார்.

திருவாளர்கள்: க. தியாகராஜாபிள்ளை, சி. க. சுப்பிரமணியம், ச. நிற்சிங்கம் ந. சிவஞானம் ஆகியோர் திரு, கனகரத்தினத்தின் சேவையைப் பாராட்டிப்பேசினர்.

0 0 0

அராலி. வெள்ளி

அராலி கிழக்கு அமெரிக்கன் மிஷன் கலவன் பாடசாலையில் கடந்த 29 ஆண்டுகளாககடமையாற்றி இளைப்பாறிய திரு. வி. முருகேசுவுக்கு சேவைநலம் பாராட்டுவிழா நடைபெற்றது. ஆசிரியர் திரு. சி. முத்தையா தலைமையில் நடைபெற்றவிழாவில் பல ஆசிரியர்கள் அன்னாரின் சேவையைப் பாராட்டிப் பேசினர்.

ஆசிரியர் திரு. க. சொக்கலிங்கம் நன்றியுரை கூறினார். வேறு பலரும் உரையாற்றினர்.

## அரிசிக் கப்பல்

காலி, வெள்ளி

காலித்துறைமுகத்தை வந்தடைந்துள்ள ரங்கூன் நாட்டைச் சேர்ந்த கப்பலிலிருந்து 6000 தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டு வருகின்றது. அத்துடன் மற்றுமொரு கப்பலில் சீனவுக்கு ரப்பரும் ஏற்றுமதி செய்யப்பட்டுவருகின்றது.

## பாங்கொக் பயணமானார்

சுழிபுரம், வெள்ளி

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அதிபர் திரு. எஸ். சிவசுப்பிரமணியம் பாங்கொக்கில் நடைபெறும்விளையாட்டு சம்பந்தமான கருத்திரங்கிலும், கோலாலம்பூரில் நடைபெறும் கல்வி சம்பந்தமான கருத்தரங்கிலும், கலந்து கொள்ளுமுகமாக நேற்று பாங்கொக் பயணமானார். தேசிய ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதியாகச் செல்லும் இவருடன் இவரது பாரியாரும், பெரேரா என்பவரும் சென்றுள்ளனர்.

## 150 நீர்ப்பாசன பிரிவுகள்

கோட்டை, வெள்ளி

நெற்செய்கையை மேலும் அபிவிருத்தி செய்யும்பொருட்டு நீர்ப்பாசன மின்சார நெடுஞ்சாலை அமைச்சர் திரு. மைத்திரிபால சேனநாயக்கா குளங்கள் யாவற்றையும் விஞ்ஞான அடிப்படையில் திருத்தியமைக்கத் திட்டமொன்றை வகுத்துள்ளார்.

அமைச்சரின் இப்புதிய திட்டத்தின்படி நாடு 150 நீர்ப்பாசனப் பகுதிகளாகப் பிரிக்கப்படவுள்ளது.

ஒவ்வொரு பகுதியிலும் அப்பகுதி அரசாங்க அதிபர் காரியாதிகாரி, விவசாய அங்கத்தவர்கள் ஆகியோர் கொண்ட நீர்ப்பாசன குழுக்களும் அமைக்கப்படவுள்ளன இக்குழுக்கள் அமைச்சுக்கு தம் பகுதிகளிலுள்ள திருத்தப்படவேண்டியகுளங்கள் பற்றிய பட்டியல்களை அளிக்கும்.

அடுத்தாண்டுமுதல் இத்திட்டம் செயற்படவுள்ளது.

0 0 0

முல்லைத்தீவு, வெள்ளி

முல்லைத்தீவு அரசினர் வைத்தியசாலையில்மலேரியா தடுப்புப் பகுதி உத்தியோகத்தராகக் கடமைசெய்யும் திரு. சுப்பிரமணியம் அடுத்த மாதம் முதல் திருக்கேதீஸ்வரத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்

0 0 0

முல்லைத்தீவுப் பகுதி பால் விநியோக நிலையங்களின் மேற்பார்வையாளராகச் சென்த ஆறு வருடங்களாகக் கடமைசெய்யும் திரு அசம்புலிங்கம் வலி-வடக்கு தெல்லிப்பளைக்கு அடுத்த மாதம் முதல் இடமாற்றலாகிச் செல்கிறார். தெல்லிப்பளையிலிருந்து திரு. சுப்பிரமணியம் முல்லைத்தீவுக்கு இடமாற்றலாகிவருகிறார்

0 0 0

தாவடி, வெள்ளி

மன்னார் தபாற்கந்தோரில் கடமையாற்றிய திரு. வி சே சுப்பிரமணியம், கொழும்பு பிரதம தபாற்கந்தோர் திரு. வி செல்வரத்தினம், வவுனியா தபாற்கந்தோர் திரு. எம் குணரத்தினம், நீர்கொழும்பு தபாற்கந்தோர் திரு. ஏ பி செல்வநாதன், நெடுங்கேணி தபாற்கந்தோர் திரு எல் செல்லத்துரை, அனுராதபுரம் வட-மத்திய தபால் அத்தியட்சகர் கந்தோர் திரு.எஸ் இரத்தினசிங்கம் ஆகியோர் ஜனவரி முதலாம் திகதி முதல் யாழ்ப்பாணம் வட-பெரும்பாக தபால் அத்தியட்சகர் காரியாலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

## 'இரு பாடசாலைகளையும் இணைக்கவும்'

சாய்ந்தமருது, வெள்ளி

மண்டூர் ராமகிருஷ்ண மிஷன் ஆண்கள் பாடசாலையையும் மண்டூர் ராமகிருஷ்ண மிஷன் பெண்கள் பாடசாலையையும் இணைத்து இப்பகுதி மாணவ மாணவிகளின் கல்வி நலனுக்கு உதவிபுரியுமாறு மட்டக்களப்பு பிராந்திய கல்வியதிகாரியை வேண்டுவதென மண்டூர் சனசமூக நிலையக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது

...தபால்தலையில் சித்திரிக்கப்பட்டிருக்கும்.

21-ம் திகதி காலை கொழும்பு பிரதம தபால் நிலையத்தில் இத்தபால்தலை வெளியிடப்படும். தபால் அமைச்சின் நிரந்தரக்காரியதரிசி திரு. டாக்டர் உடகம இவ்வைபவத்தில் கலந்து கொள்ளுவார்.

ஏற்றுமதி இறக்குமதி

## ஆலோசகசபை மாநாடு

கோட்டை, வெள்ளி

இம்மாதம் 22-ம் திகதி பிரதமர் திருமதி பண்டாரநாயகாவின் தலைமையில் கொழும்பு நவரங்கலை மண்டபத்தில் உள்நாட்டு வெளிநாட்டு ஏற்றுமதி, இறக்குமதி அமைச்சின் ஆலோசகசபை மகாநாடு நடைபெறவிருக்கிறது.

இம்மகாநாட்டில் அமைச்சர்கள் திரு. ரி. பி. இலங்கரத்ன, திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா, திரு. பீட்டர் கெனமன், டாக்டர் என். எம். பெரேரா ஆகியோர் உரையாற்றுவார்கள். 700 அங்கத்தவ உத்தியோகத்தர்கள் இம்மகாநாட்டில் கலந்துகொள்வார்கள். முதல்முதல் நடைபெறும் ஆலோசகசபை அங்கத்தவர் மகாநாடு இதுவாகும்.

## ஆயுர்வேத நிலைய இட மாற்றத்துக்கு ஆட்சேபம்

உடுப்பிட்டி, வெள்ளி

அல்வாயிலுள்ள இலவச ஆயுர்வேத வைத்தியசாலையை வியாபாரிமூலை நாவலடிச்சந்திக்குக் கொண்டு செல்வதென கட்டைவேலிக் கிராமசபை தீர்மானித்துள்ளது.

கட்டைவேலிக் கிராமசபையின் இம்முடிவு பாரபட்சமானதென்றும் இவ் இலவச வைத்தியசாலையை இடமாற்றுவதால் பொதுமக்கள் வீணாக நெடுந்தூரம் நடக்கவேண்டியுள்ள தென்றும் தென் அல்வைப்பொதுமக்களும், வாலிபமுன்னணியினரும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

## 800 தாதிமார்

கோட்டை, வெள்ளி

வருடாவருடம் புதிதாக 800 தாதிமார்களைத் தெரிவு செய்ய சுகாதார அமைச்சர் திரு. டபிள்யு. பி. ஜி. ஆரியதாசா தீர்மானித்துள்ளார்.

...டியும். வகுப்புவாதம் பேசி உரிமை பெறமுடியாது.'

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தீவுப்பகுதி அமைப்பாளரான திரு. ப. கதிரவேலு புங்குடுதீவில் நடைபெற்ற கூட்டமொன்றில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் பேசுகையில், கூட்டணி அரசாங்கம் ஏழை பணக்காரன் என்றபேதமின்றி சகலருக்கும் வேலை வாய்ப்பு அளித்துவருகிறது என்றும்கூறினார்.

## பதவி உயர்வு

ஊர்காவற்றுறை, வெள்ளி

ஊர்காவற்றுறைப் பட்டினசபையின் காரியதரிசியாகக்கடமையாற்றிய திரு. எம். தாமோதரம் பிள்ளை பதவிஉயர்வு பெற்று சுன்னாகம் பட்டினசபைக்கு இம்மாத இறுதியில் இடமாற்றம் பெற்றுள்ளார்.

## காய்கறி நாற்று தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், சனி

கோப்பாய்த் தொகுதியில் கடந்தவாரம் பெய்த மழையினுல் காற்கறி நாற்று மேடைகள் பல அழிந்துவிட்டதாக அரசாங்க விவசாய இலாகா அதிபருக்கு விவசாயிகள் அறிவித்துள்ளனர்.

நாற்றுமேடைகள் அழிந்துவிட்டதால் விதைநாற்றுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதாகவும் வெளியில்விதை நாற்றுக்களை அதிக விலை கொடுத்து வாங்கவேண்டியுள்ளதென்றும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

(கு-வி-ம)

## "மக்கள் கடையாக்குக"

கிளிநொச்சி, வெள்ளி

இங்குள்ள விற்பனவு இலாகாவை திருத்தி சகல வசதிகளும் கொண்ட மக்கள் கடையாக மாற்றித் தரும்படி இளம் விவசாயிகள் கழகமும், முற்போக்குச் சங்கங்களும் வர்த்தக அமைச்சரையும், தொகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. வீ. ஆனந்தசங்கரியையும் மகஜர் மூலம் கேட்டுள்ளனர்.

அவர்களின் மகஜரில் இங்கு பல பாவனைப் பொருட்கள் இல்லாதிருப்பதாயும் செத்தல்மிளகாய் இருப்பிருந்தும் விற்க வேண்டாமென உத்தரவு வந்திருப்பதாக ஊழியர்கள் கூறுவதாயும் குறிப்பிட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

...காரிகள் பிரிவுகள் மூலம் விளையாட்டுநாடகம்வைத்து இறுதியாக மாபெரும் தேசிய விழாவொன்றை நடாத்தி அவ்விழாவிற்கு கலாச்சார மந்திரியை அழைப்பது.

நிலையங்கள் நன்கொடை வழங்குவதற்கு நிலையக் காரியதரிசியும், சனசமூக நிலைய பார்வையாளருடன் பங்குகொள்வது இச்சமாசத்தில் சேராத நிலையங்களுக்கு அரசாங்க இலவசமுத்திரை வழங்குவதில்லை. சமாஜ காரியதரிசியின் சிபார்சின் பெயரில்அரசாங்கமுத்திரை கொடுக்கவேண்டும்.

வெளித்தேச தூதுவர் காரியாலயங்கள் மூலம் இலவசபத்திரிகை, புத்தகங்கள் படக்காட்சி ஆகியவை உதவுவதற்கு சகல தேச தூதுவர் கரியாலயங்களுக்கும் அழைப்பு அனுப்புவது.

## கார் குடைசாய்ந்தது

உடுப்பிட்டி, வெள்ளி

ஓடிக்கொண்டிருந்த காரொன்று சக்கரம் கழன்றதால் விபத்துக்குள்ளாகிக் குடைசாய்ந்தது. அல்வாய் தெற்கு மாலுசந்தியில் இவ் விபத்துநிகழ்ந்தது. டாக்டர் ஒருவரின் காரை அவரது சாரதி ஓடிக்கொண்டுவருகையிலேயே இக்கார் குடைசாய்ந்து படுசேதமடைந்தது. காரினுள்ளிருந்த இரு பெண்களும் சாரதியும் அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பினர்.

கல்முனையில்

## மனித உரிமைத் தினம்

சாய்ந்தமருது, வெள்ளி

கல்முனை பாத்திமாக் கல்லூரி மண்டபத்தில் கல்முனை ஆட்சிமன்ற உறுப்பினர் ஜனுப் எம். சி. அகமது தலைமையில் உரிமைத்தினம் கொண்டாடப்பட்டது.

பல இனத்தவர்களின் தலைவர்கள் கலந்துகொண்ட இவ்விழாவில், அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. டி. டன்பேத் உட்பட பலர் உரையாற்றினர்.

## "தனிக்கிராமசபை வேண்டும்"

ஊர்காவற்றுறை. வெள்ளி

சரவணைக் கிராமத்திற்குத் தனியாக ஒரு கிராமசபை நிறுவவேண்டுமென நாரந்தனை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கிளை சம்பந்தப்பட்ட அமைச்சரைக் கேட்டுள்ளது.

...க்கப்பட்டு ஒரே பாடசாலையாக இயங்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## இன்றைய பலன்

மார்கழி மாதம் 4-ம் திகதி

[19-12-70]

மேஷம்- எண்ணிய கருமத்தில் இன்று வெற்றி உண்டு. புண்ணிய வழிகளில் பொருள்செலவு ஏற்படும். வரவேற்கத்தக்கதினம்.

ரிஷபம்- தொழிலால் மாற்றம் அல்லது இருப்பிட மாற்றத்திற்கு வழிகோலப்படலாம். இதன் மூலம் பதவி உயர்வும் கிடைக்கலாம்.

மிதுனம்- இன்று அதிக ஆதாயம் கிடைக்கும், புதுத் தொழில் முறைகளை மனம் நாடுதல். நீண்ட பிரயாணத்திற்கும் இடமேற்படலாம்.

கடகம்- கடன்தொல்லைகள் கவலையைத் தரும். உறவினர்களுடன் பிணக்குகள் தோன்றும். உஷாராக இருக்கவும்.

சிம்மம்- மோசடிகள் நடக்கும். சகோதரவழியால் சஞ்சலம் ஏற்படலாம். துணிவே துணையென இருக்கவும்.

கன்னி- பணமுடைதீரும். பந்துக்களின் தொடர்புகள் பெருகும்- குடும்பத்தில் பரவசமான சூழ்நிலை தென்படும்.

துலாம்- அதிக ஆசை வைப்பதன் மூலம் அவதிப்படுவீர்கள். குறுக்குவழியில் இறங்குவதற்கு எண்ணம் தோன்றலாம். தடைகள் பலவுண்டு.

விருச்சிகம்- அரசியலில் ஆர்வம் பிறக்கும். சிலருக்கு எதிர்பாராதவகையில் அதிர்ஷ்டம் கிடைக்கும்.

தனுசு- செய்தொழிலால் சிறப்பும் கிடைக்கும், வழக்குவிவகாரங்களில் வெற்றியுண்டு.

மகரம்- இன்று ஏமாற்றம் தாக்கும். குடும்பத்தில் உடல்நலம் பாதிக்கப்படலாம். சிந்தனையைத் தவிர்.

கும்பம்- திடீர் திருப்பம் வாழ்க்கையை வளம்படுத்தும். சிலர் வாழ்க்கை அதிர்ஷ்டகரமாக அமையும்.

மீனம்- புதிய தலையிடி தலைதூக்கும். மாணவர்கள் உணர்ச்சிவசப்படாது இருத்தல் நன்று.

சோதிடக்கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

இவ்வுலகில் க்ஷரன், அக்ஷரன் என இரு புருஷர்கள் இருக்கின்றனர். க்ஷரன் என்பது எல்லா ஜீவன்களையும் குறிக்கும். கூடல் தானே அக்ஷரன் ஆவான் இவ்விரு புருஷர்களுக்கும் மேலாக பரமாத்மா உள்ளார். அவரே மூவுலகங்களிலும் புகுந்து அவற்றைத் தாங்குகிருர். அவரே அழிவற்ற ஈஸ்வரன் ஆவார். — பகவத்கீதை.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams "EELANADU" Jaffna
Post Box: 49, Jaffna. Telephone: 889.

[illegible] சாதாரண வருஷம் மார்கழி மாதம் 4-ந் திகதி (19-12-70)


## வர்த்தகப் புரட்சி

இலங்கையின் வர்த்தகத் துறையிலே பெரிய புரட்சியை ஏற்படுத்தும் ஸ்ரீலங்கா அரசாங்க வர்த்தக கூட்டுத்தாபன மசோதா பார்லிமெண்டில் எதிர்ப்பின்றி நிறைவேறிவிட்டது செனெட்டிலும் அப்படியே நிறைவேறி சீக்கிரத்தில் சட்டமாகிவிடும். இம் மசோதாவின் நோக்கத்தை வர்த்தக அமைச்சர் விளக்கிப்பேசுகையில், நமது ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்தில் அந்நியர்களே பெரும்பாலும் ஈடுபட்டுள்ளதாகவும் பணலாபமே அவர்களது நோக்கமென்றும் நாட்டு மக்களின் நன்மையைப் பாதுகாப்பதுடன், பதுக்கல்கள், கொள்ளைலாபம் முதலிய ஊழல்களை ஒழித்து, அந்நிய செலாவணியைமிச்சப்படுத்தப் போவதாகவும் தெரிவித்தார் இந்த மேலான நோக்கங்கள் வெற்றிகரமாக நிறைவேறி நாடு சுபீட்சமடையவும், மக்களின் வாழ்க்கைச் செலவுகள் குறையவும் வேண்டுமென்பதையே நாட்டுப் பற்றுள்ளவர்கள் எல்லாரும் முழுமனதுடனும் விரும்புவார்கள்.

சட்டத்தை நிறைவேற்றினுலும் அதை வெற்றிகரமாக நடத்தி வைப்பது பெரும் பொறுப்பாகும். இதற்கு அனுபவம் மிகவும் தேவை. இதில் சம்பந்தப்பட்டவர்கள் கண்ணும்கருத்துமாக இருக்கவேண்டும். அமைச்சர் கூறியதுபோல், வர்த்தகக் கூட்டுத்தாபனத்திலும் ஊழல்களும் பெருச்சாளி வேலைகளும் நடக்கலாம் அதற்கு இடமின்றி தடுத்துப் பாதுகாத்தால்தான், பொதுமக்களுக்கும் இதனுல் நன்மை ஏற்படமுடியும். இன்றேல் அரசாங்கத்துக்கு இலாபத்துக்குப் பதில் பெரும் நஷ்டமும் ஏற்பட்டுவிடக்கூடும்.

அரசாங்கம் சில வர்த்தக உரிமையை எடுத்துக்கொண்டதால், விலைகள் குறைவதற்குப் பதில் அதிகரித்துள்ளதைப் பார்க்கிறேம். உதாரணமாக சீனி, காகிதம் சிமெந்து முதலிய இறக்குமதிச்சாமான்களின் விலைகள் பெரிதும் உயர்ந்துள்ளன. இந்த விலை உயர்வுக்கு சில நியாயங்களை அரசாங்கம் கூறக்கூடும். என்றுலும் பொதுமக்களைப் பொறுத்தவரை, இவ் விலை உயர்வுகள் அவர்களது சங்கடங்களை அதிகரித்தேயுள்ளன இனி வர்த்தகத்தை அரசாங்கமேபெரும்பாலும்எடுத்துநடத்துகையில் விலைவாசிகள் மேலும் உயருமோ என்று பொதுமக்கள் அஞ்சக்கூடும். அதற்கு சற்றும் இடமில்லாமல், விலைவாசிகளைக் குறைக்கும்படியான நடவடிக்கைகளை எடுத்தால்தான், பொதுமக்களின் ஆதரவும் இதற்கு இருக்கமுடியும்.

இது மகத்தான ஒரு பொறுப்பென்றும் இதைக் கவிழ்க்க சதிகள் நடக்கலாமென்றும் வர்த்தக அமைச்சர் சரியாக உணர்ந்திருக்கின்றுர். இதற்காக அமைக்க இருக்கும் கூட்டுத்தாபனங்களுக்கு நாணயமும் அனுபவமும், திறமையும் மிக்கவர்களை நியமித்தால்தான் இவை வெற்றிகரமாக நடக்கமுடியும். மிக மேலான நோக்கத்துடன் ஆரம்பித்த சில ஸ்தாபனங்களில் ஊழல்கள் மலிந்து, பெரும் நஷ்டம் ஏற்பட்டது போல் இவ் விடயத்திலும் நடக்காதவாறு எல்லாப் பாதுகாப்புகளும் முன்னெச்சரிக்கையுடன் செய்யப்படுமென்றே நம்புவோம்.

## வேலை வாய்ப்பு

# போராட்டத் தீயில் புடமிடப்பட்டது லங்கா சமசமாஜக் கட்சி

**வி. எஸ். ராஜா**

[கூட்டுச் செயலாளர், லங்கா தோட்டத் தொழிலாளர் சங்கம்]

எங்கும் சுதந்திரம் என்ற பேச்சு நாட்டின் மூலைமுடுக்கெங்கும்ஒலிக்காததகாலமது. அந்தக்காலத்தில் நாட்டினைக் கட்டியாண்ட பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வாதிகள் இந்த நாட்டின் பிற்போக்குச் சக்திகளைத் தன்னுடன் இணைத்து உழைப்பாளிகளின் சக்திகளை உறுஞ்சினர். ஒருமனிதன் தொடர்ந்து 18 மணித்தியாலங்களையும் திரமாக உழைத்துவந்தான். அதீத உழைப்பினுல் அவன் வாழ்வில் அமைதிகண்டானு? இல்லை தரித்திர நாராயணனுகவே உழன்றுகொண்டிருந்தான்.

அக்காலத்தில் மனிதர்களின் அடிமைப்பிடியினுல் அல்லற்பட்ட உழைப்பாளியின்திரத்தை நோய்என்ற பூதமும் உறிஞ்சியது.

முதுகெலும்பு முறிய மூட்டை சுமந்த உழைப்பாளி, இயந்திரமாக இணைந்துழைத்துக்களைத்த தொழிலாளி வேளைக்கு உண்ணவழியிருக்கவில்லை. நோய்க்கு மருந்து கிடைக்காது வருந்தினன். அக்காலத்தில் இங்கு தனியாட்சி செலுத்தியது மலேரியா என்னும்கொடுநோய். தன் கோரப்பிடிக்குப் பலியானோர் எண்ணிக்கை எண்ணிலடங்கா.

வெள்ளை முதலாளிகளும் அவர்தம் அடிவருடிகளும் சுகங்காணும் சிலரும் சுரண்டுவதை விடாப்பிடியாகப் பிடித்துக்கொண்டிருந்தனர்.

இந்தத் துர்நிலையை அழித்தொதுக்கி,தொழிலாளவர்க்கத்துக்கு சுதந்திரச் சுபிட்ச வாழ்வுகாணவேண்டுமென்ற இலட்சிய அடிப்படையில் அமைக்கப்பட்டதே 'சூரிய மலர் இயக்கம்' 1933-ம் ஆண்டு இவ்வியக்கம் உருவாகியது. மலேரியா நோயினுல் வருந்தியவர்களைப் பேணுவதையே இவ்வியக்கம் தம்பணியாகக் கொண்டது.

1934-ம், 1935-ம் ஆண்டுகளில் இந்நோயினுல் பல்லாயிரக்கணக்கானவர் பலியாகினர். ஆயினும் 'சூரியமலர் இயக்கம் தன் பணியைச் சோரவிடவில்லை. இவ் வியக்கத்தின் சமூகப் பணியுடனே அரசியல் விழிப்பு மக்களிடையே உண்டானது. மலேரியாவினுல் பாதிக்கப்பட்ட

'சூரிய மலர் இயக்கம்' ஒரு அரசியல்அமைப்பாக 'லங்கா சமசமாஜக் கட்சி' என்ற நாமத்துடன் உருவானது.

புதிதாக உருவாகிய இக் கட்சியே முதன்முதலாகத் தொழிலாளர்களின் குரலாக ஒலித்தது. வாயற்ற பூச்சிகளாக அடிமைநிலையில்கிடந்த தொழிலாளர் இக்கட்சியினுல் உணர்வுபெற்று முன் வந்தனர். இக்கட்சிதான் தொழிலாளர்தம் உணர்ச்சியின் முதல் ஊற்று என்பதை அரசியல் பகைவர்கள்கூட ஒப்புக்கொள்வார்கள்.

1936-ம் ஆண்டு நடைபெற்ற அரசாங்க சபைத் தேர்தலில்

'காணி இல்லாதவர்களுக்குக்காணி, ஆடு, மாடு,புல் பூமி. பிள்ளைகளுக்குப் பால், வேலையற்றேருக்கு வேலை'

இந்த ஜீவாதாரக் கொள்கையைமுன்வைத்து சமசமாஜக் கட்சி முதன் முதல் கட்சிஅடிப்படையில் நான்கு தொகுதிகளுக்கு வேட்பாளர்களை நிறுத்தியது.

இந்த 4 தொகுதிகளில் இரண்டு இடம் கட்சிக்குக் கிடைத்தது.

இவ்விருதொகுதி அங்கத்தவர்களினுல் தொழிலாளியின் குரல் அரசாங்க சபையில் முதல் ஒலித்தது. அந்தக் காலத்தில் இலங்கை தேசிய காங்கிரஸ் என்றகட்சியே இயங்கிக்கொண்டிருந்தது. ஆளும் பிரிட்டிஷாரின் தயவை எதிர்பார்த்துநின்ற தேசிய காங்கிரஸின் கொள்கைகளை எதிர்த்துபோராடும் வாய்ப்பு புரட்சிகரமான இவ்வியக்கத்திற்குக் கிட்டியது.

முதன்முதல் பிரிட்டிஷாருடனும் தேசிய காங்கிரஸ் அமைச்சரவையுடனும் 'பிரேஸ் கேர்டில் தகராறு' [..]ன் மோதல் ஆரம்பமாகி[..]. அவ்வேளை அமைச்சர்களாகவிருந்த சேர். டி பி. ஜெயதிலகா, டி. எஸ்.சேனநாயக்கா, எஸ் டபிள்யு ஆர் டி. பண்டாரநாயக்கா ஆகி[..] அமைச்சரவையிலிருந்து ராஜினுமாச் செய்ய

[..]டையே விழிப்பைக்கொடுத்தது.

இம்மாறுதல் ஏற்பட்ட வேளை நாட்டில் உருப்படியான தொழிற்சங்கம் எதுவுமில்லை. ஆயினும் திரு. ஏ. ஈ குணசிங்கா தலைமையில் ஒரு தொழிற்சங்கம் இயங்கிக்கொண்டிருந்தது.

தொழிலாளி வர்க்கத்தை ஈடேற்ற சமசமாஜ இயக்கம் தொழிற்சங்க இயக்கத்தை ஆக்க முனைந்தது. இதன்பயனுக வெள்ளவத்தை நெசவுத் தொழிற்சாலைத் தொழிலாளர் முதன் முதலாக லங்கா சமசமாஜக் கட்சியில் இணைந்தனர்

மலையகத்தில் வாழும் தொழிலாளர் ஆக்கத்துக்காக அகில இலங்கைத் தோட்டத்தொழிலாளர் யூனியன் 10-10-1939-ல் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது

'எங்களுக்கு உரிமை வேண்டும்' என்ற கோஷத்துடன் 1939-ம் ஆண்டு முதன் முதல் முல்லோயா தோட்டத்தில் போராட்டம் ஆரம்பமாகியது. தொழிலாளர் பலர் வேலைநிறுத்தத்தில் குதித்தனர்.

ஆயிரக்கணக்கான தோட்டத்தொழிலாளர் அணிவகுத்துநின்றனர் ஒருபுறம். மறுபுறம பொலிசார் அணிவகுத்துநின்றனர். பட்டாளமும் அணிவகுத்துநின்றது. அந்தவேளையில் எங்கிருந்தோ ஒரு கல்லையெறிந்தான் ஒருவன். அக்கல்லு ஒரு பொறியாகியது அவ்வளவுதான். பிடித்தது பெரு நெருப்பு. தோழர் கோவிந்தன் பொலிசாரின் குண்டுக்கு இரையானுன். உரிமைக் குரல் எழுப்பியவர்கள் உதிரத்தை மட்டுஞ் சிந்தவில்லை. உயிரையும்பணயம் வைக்க நேரிட்டது.

1940-ம் ஆண்[டு] மே மாதம் 10-ந் திக[தி] உருவான ஏழு அம்சத்திட்டத்தின் பயனுக ஒரு நாள் சம்பளத்தில் 16 சதம் உயர்த்தப்பட்டது.

தோழர் கோவிந்தனின் மரணத்தின்பின் [..] ஏற்

சேனை, கந்தலாய் போன்ற தோட்டத்தொழிலாளர்கள் போராட்டத்தில் குதித்தனர்

தோழர் கோவிந்தன் மரணத்துக்குக்காரணமானவர்கள் தண்டனை பெறவில்லை என்ற உத்வேகம் தொழிலாளர் இதயத்தில் பசுமரத்தாணிபோல் பதிந்திருந்தது

9-4-1941-ல் தோட்டத்துரை போப் என்பவர் பலியானுர். தோட்டத்துரை கொலைசெய்யப்பட்டதன் பொருட்டு புஸ்ஸெல்லாவைப் பகுதியைச் சேர்ந்த கந்தலாய் தோட்டத்தொழிலாளர்களான வேலாயுதன், வீராசாமி, ஐயம்பெருமாள் கைதாகினர். தோழர் வீராச்சாமியும், வேலாயுதனும் முறையே 27-2-1942, 28-2-1942-ல் தூக்கிலிடப்பட்டனர்.

தூக்கிலிடப்படும் வேளையிற் கூட இவ்விரு வீரர்களும் அழவில்லை. அடக்குமுறையின் முலம் வளர்ந்து வரும் மக்களின் சக்தியை நசுக்கிவிட நப்பாசை கொண்ட கூட்டத்தைப் பார்த்துச் சிரித்தனர்.

'இன்று எங்களைக் கழுவில் ஏற்றுபவர்கள் என்ருவது ஒருநாள் கழுவில் ஏற்றப்படுவார்கள், இது நிச்சயம் அந்த எண்ணத்தினுல்தான் நாங்கள் ஆனந்தமாகச் சாகின்ேறம்'

இதுதான் அவர்தம்வாயிலிருந்து உருண்டமுத்துக்கள்.

இவர்களைத் தூக்கிவிட்டமையால் தொழிலாளர் போராட்டத்தை அடக்கிவிடலாமென்று எண்ணியவர் தோல்வியே கண்டனர்,

இப்போராட்டத்தின் பயனுக முற்போக்குச் சட்டங்கள் பல உருவாக்கப்பட்டன. அதிகசம்பளம் எட்டு மணிநேரவேலை அதிகப்படியான விடுமுறை தொழிலாளர் நஷ்டஈடு சேமஇலாப நிதி வேலையின் பாதுகாப்பு, வருடாந்த சம்பள உயர்வு போன்றவை இப்போராட்டத்தின் வெற்றிச் சின்னங்களாகும்.

1947-ல் அரசாங்க ஊழியர்கள் தொழிலாளர்களுடன் சேர்ந்து உரிமைப் போர் நடத்தினர், 1953-ம் ஆண்டின் ஹர்த்தால் போரா

# ஜெயாறன் எழுதுவது

நாட்டிலே புதுப்புது நோய்களால் மக்கள் வருந்துகையில், கொழும்பு வைத்தியக் கல்லூரி டாக்டர் ஒருவர் தமது கடமையையும் தொழிலையும் மறந்து, தீமிதியலைப்பற்றி இன்னும் விதண்டாவாதம் செய்துகொண்டிருப்பது துரதிருஷ்டமாகும்

கதிர்காமம் முதலிய இடங்களில் தீமிதியல் செய்யும் பக்தர்கள், நேர்த்திக்கடனைச் செலுத்தி தங்களைத் தூய்மைப்படுத்திக்கொள்ளவே அவ்விதம் செய்கிறுர்களேயன்றி, பிறரால் இது முடியாதென்று காட்டவோ அல்லது வீம்புக்கோ அல்ல. என்றுலும் கொழும்பு சுகததாஸா ஸ்ரேடியத்தில் 18 அடி தீயை வளர்த்து 6 வயதுள்ள ஒரு பாலகன் உள்ளிட்டு சில பக்தர்கள், டாக்டர்கள் முன்னிலையில் தீமிதியலைச் செய்துகாட்டி, நற்சாட்சிப்பத்திரமும் பெற்றனர். உண்மையில்அவர்கள் இதற்கு உடன்பட்டே இருக்கப்படாது. இதனுல் தீமிதியலின் புனிதம் குறையுமேயன்றி உயரமுடியாது.

பக்தர்கள் செய்யுல் காரியங்களை அதிலும் இந்துசமயத்தவரின் பழக்கங்களை பரிகசிக்க எப்போதும் சிலருண்டு. இவ்வித அத்தாட்சிகளால் அவர்கள் மனதை மாற்றிவிடமுடியாது.மாற்ற முயலவேண்டிய அவசியமுமில்லை பத்திரிகைகளில் முக்கியமான செய்திகளுக்கும் இடமில்லாதபோது, சில பத்திரிகைகள் இந்த வீண் விதாண்டாவாதங்களுக்கு முன்பக்கத்தில் இடமளிக்கின்றன! காரணம் என்னவாயினும் சரி, இனியாவது பக்தர்கள், இவ்வித வாதங்களைப் பொருட்படுத்தாமல், பக்தியை வளர்த்து இறை அருளைப் பெறுவதிலேயே முழுநாட்டத்தையும் கொள்ளுவது பெரிதும் விரும்பத்தக்கதாகும்.

0 0

'தமிழ் மகள்' சஞ்சிகையின் ஆசிரியையும், யாழ்ப்பாணத்திலே ஒரு புகழ்பெற்ற குடும்பத்தைச் சேர்ந்தவருமான திருமதி மங்களம்மா மாசிலாமணி அவர்கள் காலமான செய்தியைக் கேட்டு திடுக்கிட்டு வருந்தினேன்.

பத்து நாட்களுக்கு முன்

தள்ளிப்போட்டுவிட்டனவாம்.

ஏன் இந்த நியமனத்தை எதிர்க்கவேண்டும்? வீண் செலவாகுமென்ரு? அல்லது அந்த அதிகாரியின் சொல்லுக்கு மதிப்பு இராதென்பதாலா? மனித அடிப்படை உரிமைகள் இலங்கை உள்ளிட்டு பல நாடுகளிலும் மறுக்கப்படுகின்றன. இந்த நிலை உடன்மாறிவிடுமென்று எதிர்பார்ப்பதற்கில்லை என்ருலும் விசேஷ அதிகாரி ஒருவர் இருப்பின் அவரிடம் முறையிட்டு, அநீதிகளை அம்பலப்படுத்தவாவது முடியலாமல்லவா? சுவரோடாகிலும் சொல்லி அழு, என்பார்கள், ஆறுதலுக்கு அது ஒரு வழிதானே!

0 0 0

விஞ்ஞானத்துக்காக நோபல்பரிசுபெற்ற ஸி. வி. ராமனுக்கு பாரிஸில் ஒரு விருந்துபசாரம் நடக்கையில், ஒருவர் அவருக்கு மதுபானம் அளிக்கமுன் வந்தாராம். நகைச்சுவை மிக்க அவர், "சாராயத்தின் மீது 'ராமன் எபக்ட்' (அவர் கண்டுபிடித்த விளைவு) என்ன என்பதைக் காட்டியிருக்கிறேன். ஆனுல் ராமன் மீது சாராயத்தின் 'எபக்ட்' (விளைவு) என்ன என்பதைக் காட்ட இடமளிக்க மாட்டேன்!" என்று அவர் கூறியதும் எல்லாரும்சிரித்துவிட்டனராம்.

......

## பிரதமருக்கு நன்றி

கோட்டை, வெள்ளி

"பரிசுத்த பாப்பரசரை இலங்கையில் வரவேற்பதற்கு ஒரு சந்தர்ப்பத்தையளித்து அவருக்கு இதுவரை காலமும் நடைபெருதவாறு ஒரு வரவேற்பை இலங்கைப் பிரதமர், மகாதேசாதிபதி மற்றும் அரசில் பிரமுகர்கள் அளித்தமைக்கு கத்தோலிக்கமக்கள் ஆழ்ந்த நீடித்த நன்றியுடையவராகவிருக்கிருர்கள்'

கொழும்பு அதிமேற்றிராணியார் கருதினுல் கூரே வெளியிட்ட நன்றியுரையில் பேிற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்நன்றியுரையில் இதனுல் கூரே மேலும் தெரிவித்துள்ளதாவது:

'கட்டுநாயக்கா விமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாம் அதற்கு இடமின்றி தடுத்துப் பாதுகாத்தால் தான், பொதுமக்களுக்கும் இதனால் நன்மை ஏற்பட முடியும். இன்றேல் அரசாங் ... போல இவ் விடயத்திலும் நடக்காதவாறு எல்லாப் பாதுகாப்புகளும் முன்னெச்சரிக்கையுடன் செய்யப்படுமென்றே நம்புவோம்.

## வேலை வாய்ப்பு

வேலைவாய்ப்புத் தேடிக் கொடுக்கும் தொழில் இணைப்புக் கந்தோர்களை மூடிவிட்டு கிராமசேவையாளர், காரியாதிகாரிகள் மூலம் வேலையற்றோருக்கு வேலைவாய்ப்புத் தேடிக் கொடுக்கும் திட்டத்தை பிரதமரும் வேலைவாய்ப்புக்குப் பொறுப்பான அமைச்சருமான திருமதி பண்டாரநாயக்கா கொண்டு வந்திருப்பது வரவேற்கக் கூடியதும் பாராட்டுக்குரியதுமாகும்.

தொழில் இணைப்புக் கந்தோர்கள் நாட்டின்பல இடங்களிலிருந்தும் அந்தக் கந்தோர்களில் பணிபுரிபவர்களுக்குத்தான் வேலைவாய்ப்புக் கிடைத்திருக்கிறதேயொழிய உண்மையிலேயே வேலையில்லாமலிருக்கும் பலருக்கு வேலைவாய்ப்பைத் தேடிக் கொடுக்கவில்லையென்பது நாடறிந்த உண்மை. தொழில் இணைப்புக் கந்தோர்களிலிருந்தும் அந்தக் கந்தோர்களில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்தும் குறிப்பிட்ட காலங்களில் புதுப்பித்தும் ஆண்டுகள் பல கடந்தும் வேலை எதுவும் அந்தக் கந்தோர்கள் மூலம் பெறமுடியாதவர்கள் பலர் இன்னமும் இருக்கின்றனர். ஏதோ ஒரு தொழிலில் ஈடுபட்டிருந்தாலும் சிறந்தஉத்தியோகம் கிடைக்கவேண்டுமென்பதற்காக இக்கந்தோர்களில் "வேலையில்லாதிருக்கிறோம்" என்று பதிவுசெய்து வேலையற்றோர் பட்டியலை நீளவைத்திருப்போரும் பலர்உளர்.

வேலைவாய்ப்பைத் தேடிக்கொடுக்கும் பொறுப்பு கிராமசேவையாளர், காரியாதிகாரிகள் ஆகியோரிடம் ஒப்படைக்கப்படின் அரசாங்க கூட்டுத்தாபனங்கள் ஆகியவைகளில் மட்டுமல்ல தனியார் துறைகளிலும் உண்மையிலேயே வேலையற்றிருப்போருக்கு வேலை கிடைக்க வாய்ப்பேற்படும்.

இதிலும் ஊழல்கள் ஏற்படக்கூடும் என்பதை உணர்ந்து அதற்குத் தகுந்த முறையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். வேலைவாய்ப்பில் தகுதிக்கும் திறமைக்கும்தான் இடமளிக்கப்படவேண்டுமென்பது முக்கிய அம்சமாக இருக்க வேண்டும்.

## சமசமாஜக் கட்சிபற்றி தொழிற்சங்கப் பிரதிநிதி

எட்டியாந்தோட்டை, வெள்ளி

'இந்த நாட்டின் தேசிய ஒருமைப்பாட்டுக்கென அயராது உழைத்து அரசியலில் அநேக துன்பங்களைக் கண்ட ஒரு இயக்கம் இந்த நாட்டிலேயே இருக்குமானல் அது இலங்கை சமசமாஜக் கட்சியே. தமிழ் பேசும் மக்களும் மனித இனத்தைச் சேர்ந்தவர்கள், அவர்களுக்கும் மனித உரிமைகள் வழங்கப்படவேண்டுமென எமது இயக்கம் போராடியது' எனஇலங்கை சமசமாஜக் கட்சியின் ஆதரவில் இயங்கும் லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியனின் முதலாவது வருடாந்தக் கூட்டம் அலகொல்ல தோட்டத்தில் நடைபெற்றபொழுது யூனியனின் இணைச்செயலாளர் திரு வி. எஸ். ராஜா கூறினர். கூட்டத்திற்கு யூனியன் எட்டியாந்தோட்டை மாவட்டத் தலைவரும் தேசிய லொத்தர் சபை டைரக்டருமான திரு டி. எம். டி சில்வாதலைமை வகித்தார். தொடர்ந்து திரு. ராஜா பேசும் பொழுது

58-ம் வருடம் நடந்த வகுப்புக் கலவரதின் போது எட்டியாந்தோட்டைதொகுதியில் சிங்களவரும் தமிழரும் சகோதரர்களாகவேவாழ்ந்தனர். இச்செயலுக்கு காரணம் நமது தலைவர் திரு. என். எம். பெரேராவே. தமிழ் மக்கள் காலத்தில் செய்த நன்றியை மறக்காதவர்கள், என்ருர்.

கூட்டத்தில் அட்வகேட். நீல்டயஸ், எஸ். கோவிந்தசாமி, எம். முருகேசு, ஆர். நாகம்மா உட்பட பலர் பேசினர்.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலே வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 19-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

...னர். ஆயினும் "சூரியமலர் இயக்கம் தன் பணியைச் சோரவிடவில்லை. இவ் வியக்கத்தின் சமுகப் பணியுடனே அரசியல் விழிப்பு மக்களிடையே உண்டானது. மலேரியாவினால் பாதிக்கப்பட்ட பகுதியிலுள்ளவர்களே அரசியலாருக்கு எதிராக முதல் குரல் கொடுத்தனர்

...ந்த அரசியல் விழிப்புணர்ச்சியின் அடித்தளத்திலேயே 1935-ம் ஆண்டு ... அவ்வேளை அமைச்சர்களாகவிருந்த சேர். டி பி. ஜெயதிலகா, டி. எஸ்.சேனநாயக்கா, எஸ் டபிள்யு ஆர் டி. பண்டாரநாயக்கா ஆகியோர் அமைச்சரவையிலிருந்து ராஜினமாச் செய்ய நேரிட்டது. இது அதிகாரவர்க்கத்துக்கும், அபிமானிகளுக்கும் பேரதிர்ச்சியைக் கொடுத்தது. இராஜினமா வாபஸ் பெறப்பட்டதாயினும் இச்சம்பவம் மக்களி... மாதம் 10-ந் திகதி உருவான ஏழு அம்சத்திட்டத்தின் பயனுக ஒரு நாள் சம்பளத்தில் 16 சதம் உயர்த்தப்பட்டது.

தோழர் கோவிந்தனின் மரணத்தின்பின் ஏற்பட்ட புதிய திருப்பத்தின் பேருக வெவல்ஹின்ன, தெமோதர, உடுநுவர, ரம்போடஸ்டெலன்பேர்க், அட்டாம்பிட்டிய, கடியஞ் ...

# "சுவீகரிப்பதில் பாகுபாடு இல்லையெனில் ஆதரிப்போம்"

## ஆட்சிமன்றத்தில் தர்மலிங்கம்

கோட்டை, வெள்ளி

"தொழில் நிறுவனங்களை வகைப்படுத்திப் பாகுபாடில்லாமற் அவற்றை அரசாங்கம் எடுப்பதானுல் அதை நாங்கள் ஆதரிப்போம்" என்று உடுவில் பிரதிநிதி திரு. வி. தர்மலிங்கம் (தமிழரசு) நேற்று ஆட்சிமன்றத்தில் சுவீகரிப்பு மசோதா மீதான விவாதத்தில் பேசுகையில் தெரிவித்தார். திரு. தர்மலிங்கம் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

இலங்கைத் தமிழரசுக் கட்சி இந்த மசோதாவை ஆதரிக்கமுடியாமல் இருப்பது, சோஷலிஸத்துக்கு மாறானதென்பதால் அல்ல; ஓர் அமைச்சருக்கு இந்த மசோதாவில் கூறப்பட்ட அதிகாரங்களை வழங்குவதனுல் தான் நாங்கள் ஆதரிக்க முடியாமலிருக்கிறது. ஒரு சமுதாயம் சட்டத்தினுல் ஆளப்படவேண்டுமேயன்றி தனி மனிதனுல் ஆளப்படக் கூடாது. இலங்கையில் வருங்காலத்தில் தனியார் துறையின் தலைவிதி அமைச்சரின் கையில்தான் தங்கியிருக்கிறது. அவருடைய இஷ்டத்திற்கு எந்தவித நியாயமும் காட்டாமல் ஒரு தொழில் ஸ்தாபனத்தை அரசாங்கத்தின் உடைமையாக்குவதற்கு இம்மசோதா வழிவகுக்கிறது.

இந்த நாட்டில் எல்லா விஷயங்களும் அரசியல் அடிப்படையிலும், அரசாங்கக் கட்சியை வளர்க்குமுகமாகவும்தான் நடைபெற்று வருகிறது.

இப்படிப்பட்ட நிலையிலே ஓர் அமைச்சருக்கு இந்த அதிகாரத்தைக் கொடுத்தால், அவர் அரசியல் அடிப்படையிலும், கட்சி அடிப்படையிலும்தான் செயலாற்றி எதிர்க்கட்சிகளின் தொழில் ஸ்தாபனங்களை எடுக்கமுனைவார் என்ற ஐயத்துக்கு இடமுண்டு.

நாட்டின் நலனுக்கு விரோதமான முறையிலும் தொழிலாளருக்கு விரோதமான முறையிலும் செயல்படும் ஸ்தாபனங்களையும்தான் அரசாங்கம் எடுக்குமென்று அமைச்சர் கூறுகிருர். எந்த ஒரு தொழில் ஸ்தாபனத்தையும் தொடங்கும் எவரும் நாட்டின் நலனை மட்டும் கருத்தில் கொண்டோ, தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுக்கவேண்டுமென்ற நோக்கத்துடனே தொடங்குவதில்லை பணம் சம்பாதிக்கவேண்டுமென்ற நோக்கத்துடன்தான் எவரும் தொழில் ஸ்தாபனத்தைத் தொடங்குவர். அமைச்சர் கூறுவதுபோல் நாட்டுக்கு விரோதமான, தொழிலாளர் விரோதமான நடவடிக்கைகளில் ஈடுபடும் ஸ்தாபனங்கள் என்று கணிப்பதானுல் இந்த நாட்டிலுள்ள அத்தனை தொழில் ஸ்தாபனங்களிலும் இவ்வித குறைகளைக் கண்டுபிடிக்கலாம்.

சகல தொழில்களையும் தேசியமயமாக்குவதென்பது இப்போதுள்ள நிலையில் சுலபமல்ல என்பதை அமைச்சரே ஒப்புக்கொண்டிருக்கிருர். எனவே தொழில் ஸ்தாபனங்களை அங்கு வேலை செய்யும் தொழிலாளர்களின் எண்ணிக்கையைக் கொண்டோ அல்லது உற்பத்திசெய்யப்படும் பொருள்களைக்கொண்டோ அதாவது அத்தியாவசியப் பொருள்களை உற்பத்திசெய்யும் நிறுவனங்கள், ஆடம்பரப் பொருள்களை உற்பத்திசெய்யும் நிறுவனங்கள் என வகைப்படுத்தவேண்டும்இவ்விதம் வகைப்படுத்தியபின் இவருடைய, அவருடைய தொழில்நிறுவனங்கள் என்ற பாகுபாட்டுக்கு இடமில்லாமல், அரசு அவசியமெனக் கருதும் தொழில்நிறுவனங்களை எடுப்பதானுல் இலங்கைத் தமிழரசுக்கட்சி இந்த அரசுடைமையாக்கும் நடவடிக்கையை நிச்சயமாக ஆதரிக்கும்.

......

## "டாக்டரின் இடமாற்றத்தை ரத்துச்செய்க"

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் கடமையாற்றும் டாக்டர் ஜெயசூரியாவின் இடமாற்றத்தை ரத்துச் செய்யும்படி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி நல்லூர் கிளை சுகாதார அமைச்சிடம் கேட்டுக்கொண்டுள்ளது.

மேற்படி கிளையின் தலைவர் திரு எஸ். ஏ. கந்தசாமி சுகாதார அமைச்சருக்கு அனுப்பியுள்ள தந்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

டாக்டர் ஜெசூரியா ஆஸ்பத்திரியில் நிலவிய ஊழல்களைப் போக்கவும், ஆஸ்பத்திரியின் உயர்வுக்காகவும் பாடுபட்டவர். ஏழை பணக்காரன் என்ற பேதமின்றி நோயாளிகளுடன் பண்புடன் பழகும் இந்த டாக்டரின் சேவை யாழ். ஆஸ்பத்திரிக்கு அவசியம் தேவை. 1-1-70 முதல் இடமாற்றம் பெற்றுள்ள டாக்டரின் இடமாற்றத்தை ரத்துச் செய்யுமாறு கேட்டுக்கொள்ளுகிருேம்.

500 பேர் கையெழுத்திட்ட மகஜர் ஒன்றும் இதுசம்பந்தமாக அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

---

சுழிபுரம், வெள்ளி

சுழிபுரம் உள்ளூராட்சி மன்ற நீண்டகாலத் தலைவராகவும் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக அங்கத்தவராகவும் பணிபுரிந்து வரும் திரு சு கந்தசுவாமி ஜே. பி யின் சேவையைப் பாராட்டி சுழிபுரம் வாலிபர் சங்கம் வெள்ளிவிழா மலர் ஒன்றை வெளியிடவிருக்கிறது.

...டத்தின் வெற்றிச் சின்னங்களாகும்.

1947-ல் அரசாங்க ஊழியர்கள் தொழிலாளர்களுடன் சேர்ந்து உரிமைப் போர் நடத்தினர், 1953-ம் ஆண்டின் ஹர்த்தால் பேராட்டம் 9 உயிர்களைப் பலி கொடுத்ததாயினும் தொழிலாளர் நலனுக்கு முதலிடம் பெற்றுக் கொடுத்துள்ளது

### ஆசிரியருக்குக் கடிதங்கள்

## பண்ணிசை

ஆலயங்களின் புனிதத்துக்கும், மக்களின் இதயத்தில் பக்தி மலர்வதற்கும் தேவார திருவாசகங்கள்ஓதப்படுகின்றன இன்று மக்கள் இதை வரவேற்கின்றனர். இதற்கு அடிப்படையானது ஓதுவார் பண்முறை வழுவாது திறமையுடனும் பக்தியுடனும் பாடுவதுதான் இலங்கையில் சென்ற சில வருடங்களாக அநேக ஆலயங்களில் திருவிழாக் காலங்களில் திருமுறைக் கச்சேரியே முக்கிய நிகழ்ச்சியாக இடம் பெற்று மக்கள் மத்தியில் பக்தி உணர்வை ஏற்படுத்தி வருகின்றது. இங்ஙனம் ஏற்படக் காரணமாயிருப்பது இந்து ஆலோசனைச்சபைசைவ மக்களாகிய எங்களுக்குவ திருமுறையைப் பண்முறையாகப் பாடுவதற்கு பயிற்றுவிக்கத் தமிழ்நாட்டில் இருந்து அழைப்பித்த திரு. பி. ஏ. எஸ் இராஜசேகரன் அவர்களின்சேவையே எனச் சொன்னுல் அதுமிகையல்ல'

ம தங்கராசா'

உரும்பராய்.

## நகரமத்தியில் நாற்றமெடுக்கும் ஒழுங்கை

நாளுக்குநாள் சிறுத்துக் கொண்டேபோகும் யாழ்ப்பாணம் மின்சாரநிலைய வீதி 3ம் ஒழுங்கையின் நிலை பற்றிப் பலதடவைகள் மாநகரசபைக்கு அறிவித்திருந்த போதிலும் சபை எவ்வித நடவடிக்கையும் இதுவரை எடுக்காதது கவலைக் குரியது. பத்திரிகைகள் மூலம் எமது ஒழுங்கையின் சீர்கேடுகள் பற்றி யாழ். மாநகரசபைக்குத் தெரியப்படுத்தப் படவேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் நாம் உள்ளோம்.

நகரத்தின்மத்தியில் மத்திய பஸ் நிலையத்திற்கு எதிராக இருக்கும் இந்த ஒழுங்கை சாக்கடையாகவே காட்சியளிக்கிறது. சுகாதாரம் என்ற வார்த்தைக்கே இங்குஇடமில்லை. முன்னர் லொறிபோன்றபெரிய வாகனங்கள் செல்லக் கூடியதாக இருந்த இவ் ஒழுங்கை இப்போது மாட்டுவண்டியும் போகமுடியாத அளவுக்குச் சிறுத்துக்கொண்டு வருகிறது. வடிகால்வசதியில்லாததால் மழைகாலங்களில் மட்டுமன்றி வருடம் முழுவதுமே ஒழுங்கையில் நீர் தேங்கி அதன் மூலம் நோய் பரவ ஏதுவாகுகிறது. வீடுகளிலுள்ள கிணற்று நீரெல்லாம் ஒழுங்கையிலேயே தேங்கிநிற்கிறது இதனுல் இந்த ஒழுங்கைவாசிகளும் மற்றும் இங்கு வந்துபோவோரும் அனுபவிக்கும் கஷ்டங்கள்கொஞ்சமல்ல. இனி மேலாவது யாழ். மாநகரசபை இவ்விஷயத்தில் கவனமெடுத்து ஆக்கபூர்வமான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென தயவுடன் வேண்டிக் கொள்ளுகின்ருேம்.

அ. பொன்னையா'
ச. தங்கம்மா,
சோ,செல்லம்மா,
மற்றும் 12 பேர்
3-ம்ஒழுங்கை,
மின்சாரநிலையவீதி.
யாழ்ப்பாணம்.

...பெற்ற குடும்பத்தைச் சேர்ந்தவருமான திருமதி மங்களம்மா மாசிலாமணி அவர்கள் காலமான செய்தியைக் கேட்டு திடுக்கிட்டு வருந்தினேன்.

பத்து நாட்களுக்கு முன்பாக யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குப் புறப்படுமுன், அவர்களது அன்பகம் என்னையும் அறியாமல் என்னை இழுத்தது. அங்கு சென்றபோது, அம்மூதாட்டியார் ஒரு நாற்காலியில் அமர்ந்து பெருமூச்சுவிட்டுக்கொண்டிருந்தார். பலவீனமான அந்த நிலையிலும் வழக்கம்போல் சிரித்தமுகம் காட்டி, அன்புவார்த்தைகளால் வரவேற்ருர், இவ்வளவு சிக்கிரத்தில் அவர் மறைவார் என்று நினைக்கவேயில்லை. ஆனுல் அவருக்கு இது தெரியும்போலும்! கலைப்புலவரின் மாமியாரான அவரது மறைவால், ஒரு தூய அன்பு உள்ளத்தை இழந்துவிட்டேன். இனிஅவ்விதமான அன்பு எங்கே கிடைக்கப்போகிறது: தனது புகழ்பெற்ற கணவரான கலைப்புலவர் மறைந்தபின், தமது அருமைத் தாயையே நம்பி வாழ்ந்த திருமதி நவரத்தினத்திற்கு என்ன ஆறுதல் சொற்லுவது! இறைவன்கழல்சேர்ந்த அத்தமிழ்மகன் தோன்ருத்துணையாக நின்று காப்பாரென்பதேநம்பிக்கை,

மனித உரிமைகளைப் பல நாடுகளும் பாதுகாக்கின்றனவா என்பதைக்கவனிக்க ஒருவிசேஷ அதிகாரியை நியமிக்க வேண்டுமென்று ஒருதீர்மானம் ஐ. நா. சபையில் கொண்டுவரப்பட்டபோது அதை இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் இம் மூன்று நாடுகளும் எதிர்த்து ...

... வெளியிட்ட நன்றியுரையில் பேர்ஜண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்நன்றியுரையில் இதனுல் கூரே மேலும் தெரிவித்துள்ளதாவது:

'கட்டுநாயக்கா விமான நிலையத்தில் பிரதமர் மேற்கொண்டு நடவடிக்கைகள் யாவும் இதுவரை காலமும் ஒருவருக்கும் எடுக்கப்படாத தொன்ருகும். இதனுல் பாப்பரசரின் விருப்பு நிறைவேறியது இலங்கையின் நட்புறவுக்கு அவர் எந்நேரமும் ஆசிக் கரம் நீட்டுவார்

## சீனிக்கும் ரேஷன்

கொழும்பு, வெள்ளி

தாராளமாக எல்லா கடைகளிலும் இப்பொழுது கிடைத்துவரும் சீனி மற்றும் உணவுப் பொருட்கள் அடுத்தஆண்டிலிருந்து பங்கீட்டு முறைக்குட்படுத்தப் படலாம்என்று தெரிகிறது.

வெளி செலாவணி சம்பந்தமாக ஆராய்ந்த நிதி கமிட்டியின் சிபாரிசு ஏற்றுக்கொள்ளப் பட்டால் இந்த நடவக்கை எடுக்கப் படும். (சி.பி.ஏ


# 'ஈழநாடு'

வாரமலர்

20-12-70

- நத்தார் சிறுகதை- வாழ்வு மலர்ந்தது — டானியல்அன்ரனி
- கழுகின் குடும்பம்
- கேட்பவர் பெற்றிடுவார் தேடுவார் கண்டடைவர் நத்தார் விசேஷ கட்டுரை
- கிறிஸ்துவை தெரிந்திடுவோம் — கவிதை
- பாரதியார் கனவு சங்கானையில் நனவாகிறது — கட்டுரை
- இலங்கையிலுள்ள வரி அமைப்புக்கள் — கட்டுரை
- மரமுந்திரிகைச் செய்கை — கட்டுரை

மற்றும் பஞ்சாமிர்தம், எங்கள் கிராமம் தொடர் அம்சம், மாணவர்மலர், குடும்பச் சுடர் ஆகிய வழமையான அம்சங்களுடன் வெளிவருகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org